
ஞானச்சுடர்
சந்நிதியான் ஆச்சிரமம்
ஐப்பசி
2022
298ஆவது மலர்
ஓம்
முருகா
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு.**

**பொருள் :** ஒரு பொருள் வெளித்தோற்றத்தில் என்ன தன்மையுடைய தாயிருந்தபோதும் அதன் உள்ளே கிடக்கும் உண்மைப் பொருளை அறிந்து கொள்வது தெளிந்த அறிவாகும். (355)

**கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்**
**மற்றீண்டு வாரா நெறி.**

**பொருள் :** இப்பிறப்பில் ஆசிரியன்பாற் கேட்டு உண்மை உணர்ந்தவர் மறுபடியும் இவ்வுலகில் பிறவார். (356)

---

# நற்சிந்தனை

## *மறப்பேனோ குருநாதன் தன்னை*

ஞானதேசிகன்



**பல்லவி**

ஞான தேசிகனே சரணம்
நற்றவனே நல்லூர் வித்தகனே வருக.

**அநுபல்லவி**

ஈனப் பிறவி நீக்கு மெழிலது கண்டேன்
என்னை யென்னாலறிந் தானந்தங் கொண்டேன்
(ஞான)


**சரணம்**

காமக் குரோதமோகக் கடலைக் கடந்தேன்
கங்குல் பகலற்ற காட்சியைக் கண்டேன்
கருதுஞ் சுவாமியோக நாதனுன் தொண்டன்
தருமொரு வரமுண்டு அதுவெங்கும் மங்களம்
தங்கும்படி யருள்தந்து இரட்சி.

(ஞான)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 298

## 2022 பொருளடக்கம் ஐப்பசி


| | | |
|---|---|---|
| மனித தத்துவம் | திருமதி சி. லோகேஸ்வரி | 01 - 05 |
| ஆனந்த சாகரம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 06 - 08 |
| முழுக்க முழுக்க கருங்கல்... | கே.எஸ். சிவஞானராஜா | 09 - 10 |
| இறைவனுடன் நேரில்... | மூ. சிவலிங்கம் | 11 - 15 |
| மகா சிவராத்திரியை... | பி.கே. மகேந்திரன் | 16 - 20 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 21 - 22 |
| காப்பாற்ற வேணும் தாயே | திருமதி தில்லை சிதம்பரவேணி | 23 - 24 |
| திருமூலர் தவமொழி | ஆ.தா.இ. ஜெயபாலன் | 25 - 28 |
| பக்தனுக்காய் பசியாறிய... | வி. செல்வரத்தினம் | 29 - 31 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 32 - 35 |
| கர்மமும் விளைவும் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 36 - 37 |
| மனிதனின் இடைவிடா... | ஓஷோ | 38 - 40 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

ஏழ்மை ஒரு மனிதனை வெற்றியாளனாக்குவதற்குத் தேவையான பலத்தை அளிக்கின்றது. நம் ஒவ்வொருவருக்கும் பிறக்கும் சூழல், வளரும் சூழல், வாழும் சூழல் ஆகிய மூன்றுமே நண்பர்களாகவோ, எதிரிகளாகவோ அமைகின்றன. செல்வ வாழ்வை நாம் நண்பராகவும், ஏழ்மை வாழ்வை முக்கிய விரோதியாகவும் நினைத்து வாழத் தலைப்படுகின்றோம். செல்வ நிலையில் வாழ்பவர்கள் எல்லா வசதிகளுடன் இருப்பதால் அவர்களுக்கு வருகின்ற சிறுசிறு பிரச்சினைகளைக்கூட தனித்து எதிர் கொள்ளமுடியாமல் வாழ்வினில் சோர்ந்து போகின்றார்கள். ஏழ்மையில் பிறந்து நேர்மையுடன் வாழ்பவர்கள் தமக்கு வருகின்ற இடர்பாடுகளை உள்வாங்கி அவற்றினின்றும் மீண்டு வெற்றியாளர்களாக மாறி விடுகின்றார்கள்.

இன்றைய காலத்தில் செல்வச் செழிப்புடன் எப்படி வாழ்ந்தாலும், அப்படி வாழ்பவரை பெரிதாக மதித்தும், நேர்மையாக ஏழ்மையில் வாடுகின்ற வறியவரை வாழ்வில் தோல்வி அடைந்தவர்கள்போல எண்ணி எடைபோட்டு மதிக்கிறோம் அல்லது மிதிக்கிறோம். எமக்கு வருகின்ற செல்வச்செழிப்பு நமது சுற்றத்தையும், உற்றார் உறவினர்களையும், ஏன் தாய் தந்தையைக்கூட விரட்டி அடிக்கும். தரமற்ற புதிய நண்பர்களைச் சேர்க்கும். இத்தகைய செயற்பாட்டின்மூலம் உயர்ந்த நிலையில் இருக்கும் நாம் தாழ்ந்த நிலையை அடைகின்றோம்.

வறுமையோ வளமான வாழ்வோ எதுவாக இருந்தாலும் எவரொருவர் எந்தவிதச் சூழலையும் தனக்கு சாதகமாக மாற்றி எதிர்கொள்கின்றாரோ அவரே வாழ்வில் சாதனை படைக்கின்றார். வறுமையை வெல்வது வேறு, வாழ்க்கையை வெல்வது வேறு நேர்மையற்ற முறையில் செல்வச் செழிப்பில் மிதப்பவர்கள் காலப்போக்கில் செல்வத்தை இழந்து, மானத்தை இழந்து, வாழ்வைத் தொலைக் கின்றார்கள். நேர்மையாக வறுமையுடன் வாழ்ந்த எவரும் வாழ்வைத் தொலைத்ததாகச் சரித்திரம் இல்லை.

சந்தர்ப்ப வசத்தால் ஏழ்மை நிலையில் வாடுகின்றவர்கள் செல்வச் செழிப்பில் வாழ்பவர்களைப் பார்த்து மனக்கிலேசமுறாமல் தனது முன்னேற்றத்திற்கான முயற்சி யினை மேற்கொண்டு வந்தாலே வறுமையினின்றும் மீளலாம் வாழ்க்கையிலும் உயரலாம்.

எமது நிலையை அறிந்து எந்தச் சூழலும் எம்மை மாற்ற முடியாத மனத் திடத்தை நமக்கு அளிக்க இறைவனை வேண்டி மண்ணில் நல்ல வண்ணம் வாழ முயற்சிப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

| | |
|---|---|
| A. சண்முகராஜா | (லண்டன்) |
| M. சதாசிவமூர்த்தி | (கனடா) |
| சி. மகேஸ்வரன் | (பிரதிக் கல்விப்பணிப்பாளர், புத்தூர்) |
| செ. ஞானசபேசன் | (கிராம அலுவலர், ஏழாலை) |
| சி. உதயகுமார் | (கிராம அலுவலர், கைதடி) |
| தலைவர் | (ப.நோ.கூ. சங்கம், கட்டைவேலி) |
| தி. இரவீந்திரநாதன் | (அதிபர், கலைமணி வீதி, கட்டைப்பிராய்) |
| திருமதி கமலாம்பிகை ஸ்ரீஸ்கந்தராசா | (சுண்ணாகம்) |
| ம. குகதாசன் | (வரணி) |
| க. கோபாலசுந்தரம் | (மாருதி மோட்டோர்ஸ், உடுப்பிட்டி) |
| உரிமையாளர் | (நந்தினி என்ரபிரஸ், யாழ்ப்பாணம்) |
| செ. ரவிசாந் | (குப்பிளான்) |
| நா. செல்வராஜா | (கொக்குவில்) |
| சி. சேது | (அச்சுவேலி) |
| S. செல்வராசா (செல்வி) | (சேவிஸ் ஸ்ரேஷன், புலோலி) |
| மு. அப்புலிங்கம் | (கோண்டாவில் கிழக்கு) |
| திருமதி ப. சொக்கநாதன் | (கொக்குவில்) |
| ந. சிவக்குமார் | (ராஜன் எலக்ரோணிக், அச்சுவேலி) |
| திருமதி சசிலேகா ஜெயராஜன் | (ஆசிரியர், தோப்பு, அச்சுவேலி) |
| ப. தியாகராஜசர்மா | (திருமகள் வாசா, ஆவரங்கால்) |
| மகாலிங்கம் செல்வமணி | (ஊரெழு மேற்கு, சுன்னாகம்) |
| K. முகுந்தன் | (ஞானபண்டிதர் பாடசாலை அருகில், கொக்குவில்) |
| நா. நாகராசா | (பக்கிஸ்லேன், மானிப்பாய்) |
| ந. மணிவண்ணன் | (இரும்புமதவடி, வதிரி) |
| இராதாகிருஷ்ணன் கிரிதரன் | (தம்பலடி, பொலிகண்டி) |
| ஆ. யோகதாசன் | (பூதவராயர் கோவிலடி, உரும்பராய்) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நவரத்தினம் இந்திரமோகன் | (சண்டிலிப்பாய் மேற்கு) |
| திருமதி சிவநிதி முருகானந்தன் | (கட்டுடை, மானிப்பாய்) |
| இராசரத்தினம் வேல்குமார் | (இணுவில்வீதி, மானிப்பாய்) |
| P. சபாநாதன் | (யாழ்வீதி, மானிப்பாய்) |
| M. செந்தூரன் | (வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்) |
| க. முருகானந்தம் | (காளிகோவிலடி, மல்லாகம்) |
| த. சொக்கலிங்கம் | (இணுவில் தென்மேற்கு) |
| பா. சியாமளநாயகி | (சுண்ணாகம் கிழக்கு) |
| கிட்டிணன் ஜெயக்குமார் | (சிவன்வீதி, சிறுப்பிட்டி மேற்கு) |
| கு. ஜெகதீஸ்வரன் | (இராசவீதி, கோப்பாய் வடக்கு) |
| கி. ஜெயக்குமரபதி | (இடைக்காடு, அச்சுவேலி) |
| க. துரைராசா | (சுதுமலை தெற்கு) |
| அருச்சுனன் சுனோஜா | (தும்பளை தெற்கு) |
| சி. புஸ்பரதி | (கரணவாய் மத்தி) |
| இ. சிவபாதம் | (நீலமயில் வாசா, அல்வாய்) |
| கனகன் சின்னத்தம்பி | (சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி) |
| வே. முருகவேள் | (நெடியகாடு, வல்வெட்டித்துறை) |
| க. சத்தியதாஸ் | (வில்லிசைக் கலைஞர், சிறுப்பிட்டி) |
| வ. இராசநாயகம் | (கவிதா பொடி பில்லேர்ஸ், கரவெட்டி) |
| ரூபினி வசந்தகுமார் | (யாழ்ப்பாணம்) |
| உரிமையாளர் | (ஸ்ரீதேவி தொலைத்தொடர்பகம், அச்சுவேலி) |
| விக்னேஸ்வரி கணேசநாதன் | (நீர்வேலி) |
| சி. பத்மராசா | (நவிண்டில், கரணவாய்) |
| T.R. இரத்தினவேல் | (அரசவீதி, உரும்பராய்) |
| A. முரளிகரன் | (ஊரெழு) |
| பா. இந்துராணி | (மல்ரி ஓயில், இணுவில்) |
| சு. சுந்தரலிங்கம் | (வேவில் லேன், வல்வெட்டி) |
| வீ. வடிவேலு | (தும்பளை தெற்கு, பருத்தித்துறை) |
| Dr தர்மலிங்கம் | (நீர்வேலி) |
| சிவலிங்கம் சுகந்திகா | (ஆதியாமலை, உடுப்பிட்டி) |
| த. கனகம் | (பன்னாலை, நீர்வேலி வடக்கு) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித தத்துவம்

– திருமதி சிவராசா லோகேஸ்வரி அவர்கள் –

அர்த்தமுள்ள பெறுமதியான வளர்ப்புமுறை இன்றைய சமுதாயத்தில் அவசியம் தேவை. பழைய வாழ்க்கைமுறை அர்த்தமற்றுப் போய்விட்டது. இப்போ வாழ்க்கை வட்டம் மிக வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. இன்றைய கல்விமுறை அறிவுத்திறன் செயற்திறனைக் கூட்டி புறவளர்ச்சியைத் தந்துள்ளதேயொழிய அகவளர்ச்சியை முற்றுமுழுதாகப் புறக்கணித்து உள்ளது. இதனால் ஆன்மீகம் குன்றியது. மனித மேம்பாடுகள் அற்றுப்போய் பண்பாடுகள் அழிந்துகொண்டு போகின்றன. நான் எனது என்ற தேக அபிமானமும் காம, குரோத, மோக, லோப, மத, மாச்சர்யம் ஆகிய ஆறு உள் எதிரிகளும் தலைவிரித்தாடத் தொடங்கிவிட்டன. உலகில் தற்போது முரண்பட்ட சூழல் காணப்படுகிறது. ஒரு பக்கம் அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் காரணமாக உலகம் சுருங்கிவிட மக்களின் வாழ்வில் புரட்சி ஏற்பட்டுள்ளது. மறுபக்கம் மனிதன் கடவுளை மறந்தவனாகக் காணப்படுகிறான். வன்முறை, படுகொலை காரணமாக உலகம் சீரழிந்துள்ளது. ஜாதி, இன, மத பேதங்களைக் கடந்து நாம் அனைவரும் மனிதகுலம் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

விஞ்ஞான வளர்ச்சியால் கைபேசி, கணனி, தொலைக்காட்சி, இணையம் என்று இவற்றால் உள்நோக்கிய சிந்தனைகள் தேவையற்றுப் போகின்றது. முன்னர் நேரமிருப்பின் கோயில்கள் செல்வர். இப்போ இணையத்தோடே இணைந்துவிடுகின்றனர். இதன்மூலம் இப்போ வெளியுலக நாட்டம் அதிகரிக்கின்றது. இதனால் என்ன நடக்கின்றது. போட்டி, பொறாமை, தீவிரம், பலாத்காரம் இதெல்லாம் அதிகரிக்கின்றது. ஒரு மாணவன் பள்ளிவிட்டு வீடு வந்தால் தொலைக்காட்சி, கைபேசி என்று சதா அவற்றில் உழல்வதால் இக்காலச் சிறார்களுக்கு சுற்றம், சூழல், உறவுகள், பந்தங்கள் அதாவது சமுதாய உணர்வென்பது அற்றுப்போய் விடுகிறது. இது தவிர்க்கமுடியாதுள்ளது. முன் இரையோடு இறையையும் ஊட்டிய தாய் இன்று பயத்தை பீதியையல்லவா ஊட்டி வளர்க்கின்றாள். பிறரைப்போல் வாழ முகமூடி அகத்தூண்டுதலுக்குப் பதிலாக புறத்தூண்டலால் வளர்வதால் புத்திமதியை ஏற்றுக்கொள்ளாத பிள்ளைகள் இப்போ. இவற்றால் பெற்றார் எப்படி வளர்ப்பது என்று தெரியாது குழம்பிப் போயுள்ளனர். பயந்து போயுள்ளனர். ஆகவே தத்துவத்தை புதிய முறையில் அலசிப்பார்த்து அணுகுதல் நலம் தரும்.

1) எப்படி அன்பை ஒவ்வொருவர்மீதும் வைத்திருப்பதும் ஒழுங்குமுறையை நடைமுறைப்படுத்துவதும்.
2) எப்படி வழிகாட்டுவது.
3) குழந்தைகளின் கோபத்தை எப்படிக் கையாள்வது.
4) பிள்ளைகளால் ஏற்படும் பதட்ட நிலைக்கு எப்படி ஈடுகொடுப்பது.
5) குழந்தைகளின் தேவைகளை எப்படி என அறிந்து கொள்வதும் நிறைவேற்றுவதும்

*திறமை உள்ளவரின் முன்னேற்றத்தை யாராலும் தடுக்க முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) நல்ல பழக்கவழக்கங்களையும் முன்னுதாரணங்களையும் கடைப்பிடிக்காத பிள்ளைகளை எப்படிக் கையாள்வது, சமாளிப்பது.

இவற்றுக்கெல்லாம் குறுகலாகப் பதில் சொல்கிறார் அப்துல்கலாம் ஐயா அவர்கள்.

1) பெற்றார்
2) ஆரம்பக் கல்வி ஆசிரியர்
3) ஆன்மீகச் சூழல்

இம் மூன்றும் ஒரு குழந்தையின் எதிர்காலத்தை நிர்ணயம் செய்கின்றது என்கிறார். இவற்றை எவ்வாறு செயலுக்குக் கொண்டுவருவது. பெற்றார் பாடசாலையில் என்பதைவிட அறநெறி வகுப்புகளில் பயில்விப்பதும் அங்கு பெற்றோருக்கான கல்விவட்டம், கலந்துரையாடல் மூலமாக நிச்சயமாக இவற்றுக்கு தீர்வுகாண முடியும். ஆனால் சிறுவயதிலிருந்தே இது நடைமுறையிலிருக்கவேண்டும்.

பிற மதங்களில் யேசு, புத்தர், அல்லா என்று ஒவ்வொரு மதகுருவே வாழும் வழியைக் கற்றுக்கொடுத்துள்ளனர். ஆனால் எமது சமயத்தில் மாத்திரம் நான்கு சமய குரவர்கள் முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் மூலமாக உயர்மனமாற்றம் அடையும் வழிகளை போதித்திருக்கின்றனர். இவற்றைவிட வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள், உபநிஷத்துக்கள் என்று எல்லாமே கிருகஸ்த (இல்லற) நிலையிலிருந்து சந்நியாசத்தையும், கர்மகாண்டத்திலிருந்து ஞானமடைந்து மோட்சத்துக்கும் செல்லும் படிமுறைகளை ரொம்பவும் தெளிவாகவே விளக்கியுள்ளனர். ஒருவன் கண் விழித்ததிலிருந்து தூங்கிறவரைக்கும் தூங்கிய பின்பும் கூட எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பது (காலைக் கடன், பல் துலக்குவது, குளிப்பது, உண்பது) விரிவாகவே கூறப்பட்டுள்ளது. சைவசமயத்தில் மாத்திரம் பஞ்சமா பாதகங்களைச் செய்யக்கூடாது என்றும் குறிப்பாக புலாலுண்ணல் முழுவது மாக மறுக்கப்பட்டுள்ளது. சிலர் பேசுவதைக் கேட்டிருக்கின்றோம். கடல் உணவு மற்றும் மிருகங்களைக் கொன்று உண்ணாவிடில் பூமி தாங்காது என்று. படைத்தவனுக்குத் தெரியும் எந்த நேரத்தில் எவற்றையெல்லாம் என்ன செய்யவேண்டுமென்பது. பகுத்தறியும் மனமென்பது மனிதனுக்கே இயல்பாகவுள்ள சிறப்பான அம்சம்.

மாமிச உண்ணியான சிங்கம், புலி, நாய் போன்றன கொஞ்சத் தூரம் ஓடினாலே இளைத்துப்போய்விடும். ஆனால் தாவர உண்ணியான யானை, குதிரை, மான் போன்றன எந்தச் சோர்வுமில்லாது லாவகமாக நடந்துகொண்டேயிருப்பது கண்கூடு.

**கதை:**

நரி விலங்குகளின் மகாநாட்டைக் கூட்டி நான்கு கருத்துக்களை முன் வைத்தது.

01) மிருகங்கட்கு ஐந்து என்றும் மனிதருக்கு வேறுபட்ட பெயர்கள் இருக்கக்கூடாது. தாயின் கருவிலிருந்து பிறந்த அனைத்தும் ஒரு பெயரால் அழைக்கப்பட வேண்டும்.

02) மனிதன் அறிவுடையவன் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. மனிதனிடமும் மிருகத்திடமும் ஒரேமாதிரியான விவேகம்தான் உண்டு.

*விலை கொடுத்தாலும் பெறமுடியாத ஒரே பொருள் அனுபவம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03) நம்மை ஊமை என்கின்றனர். பேசத் தேர்ச்சிபெற்றதன்மூலம் மனிதன் அடைந்த மகிழ்ச்சி என்ன? எனவே இரண்டினதும் விளைவு ஒன்றுதான்.

04) நம்மை ரஜோ குணம் உடையவர் என்கின்றனர். மனிதர்களைவிட போற்றக்கூடிய ஏற்றுக்கொள்ளக்கூடிய உயர்வான நிலையில் இருப்பது சாத்வீக இயல்பே. காட்டில் தவம் செய்து வந்த ரிஷி ஒருவரின் தலைமையில் கூட்டம் நடந்தது.

**சிங்கம்:**

மிருகங்களிடம் உள்ள வீரம் தீரம் கம்பீரமான இயல்புகள் மனிதனிடம் இல்லை. நானே உதாரணம். நேர்மையற்ற செயல்கள் செய்வதில்லை. காரணமில்லாமல் பிற மிருகங்களைக் கொல்வதில்லை. பசியைப் போக்குவதற்காக கொல்லுகிறேன். அந்த இரையையும் விரயமாக்கு வதில்லை. இச் சிறப்பியல்புகள் மனிதனிடம் உண்டா?

**யானை:**

மனிதன் எனது காலில் பாதிகூட இல்லாதவன். வலிமையிலும் கம்பீரத்திலும் ஒப்பிட முடியாது. எனது மதிநுட்பம் மனிதனுக்கில்லை. மன்னர்கள் சக்கரவர்த்திகள் என்னில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர்கள். நான் இல்லாவிடில் விழாக்களையே ஒத்திப்போடுகிறார்கள்.

**காட்டுநாய்:**

நம்பிக்கையூட்டுவதில் எனக்கு நிகர் யாருமில்லை. விசுவாசமானவன் நான். உயிரே போனாலும் நன்றியுடைமை என்னை விட்டுப் பிரியாது. மனிதன் நன்மை செய்தவர்க்கே தீமை செய்பவனாக மாறுகின்றான். சூழ்ச்சிகள் திட்டங்கள் தீட்டி புண்படுத்துபவன். பணிவாக இருப்பதுபோல் நடித்து குழிபறிக்க ஆரம்பித்துவிடுவான். மனிதனின் இலட்சணம் இப்படி இருக்கும்போது நம்மை எப்படித் தாழ்ந்தவர் என கூறமுடியும்.

**ரிஷி:**

ஒவ்வொருவராகப் பேசியபின் தீர்ப்புக் கூறலானார். விலங்குகளிடம் கொடுமையான இயல்பு புகுந்துவிட்டால் அதை மாற்ற இயலாது. புலி எவ்வளவு பசித்தாலும் மரக்கறி சாப் பிடாது. புலால் மாத்திரம் உண்ணும். மனிதன் கெட்ட பழக்கங்கள் இருந்தாலும் சிறிதளவு முயற்சியின் மூலம் முழுமையாக தன்னை மாற்றியமைக்கின்றான். விலங்குகள் அப்படியல்ல.

**நரி:**

தன்னை மாற்றியமைக்கும் திறன் இருந்தும் ஒருவன் அதைப் பயன்படுத்தாதிருப்பானாகில் அவன் மிருகத்தைவிடக் கேவலமானவன். அவன் கற்ற கல்வி வயிற்றை நிரப்புவதற்கும் வாழ்க்கை ஓட்டுவதற்கும்தான் பயன்படுகின்றன. இதற்காக அனைத்து அநியாய வழிகளையும் பின்பற்றுகின்றான். நாம் வாழ்வதற்குரியவற்றை நியாயமான வழிகளில்தான் பெறுகின்றோம்.

*மனம்விட்டுப் பேசுவதைவிட சிறந்த அறிவு வேறு இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ரிஷி:**

மாயையை வெல்ல மனிதனால் முடியும். அதை வென்றவுடன் ஆத்மாவை உணர்ந்து அனுபவிக்கவும் முடியும். பின் நிர்வாண நிலையையும் அடையமுடியும். விலங்குகட்கும் மனிதர்க்கும் உள்ள மிக முக்கியமான வேறுபாடு இதுதான்.

எல்லா மிருகங்களும் இதை ஏற்றுக்கொண்டாலும் அனைத்து மானிடர்களாலும் இந் நிலையை அடையமுடியுமா என்ற வினா வந்தது. நம்மைப்போல் ஒரு முயற்சியும் இல்லாதவர்கள் பலர் இருக்கின்றனர். எனவே அவர்கட்கும் நமக்கும் வேறுபாடு இருக்கமுடியாது. இதை ரிஷியும் ஏற்றுக்கொண்டார். மேலும் மனிதன் தொல்லை தராதவனுக்குக்கூட தொல்லை கொடுப்பவனாக இருக்கின்றான். காரணமில்லாமல் மற்றவர்களை வசைபாடுகின்றான். உரிமையே இல்லாத விஷயங்களில் தலையிடுகின்றான். அவர்கள் என்ன நினைத்தாலும் பேசினாலும் செய்தாலும் சுயநலம் நிறைந்திருக்கின்றது. விலங்குகள் மற்ற விலங்குகட்கு திட்டமிட்டு இடையூறு செய்வதில்லை. சொத்து சேர்ப்பதில்லை. எனவே பல வழிகளில் விலங்குகளை விட மனிதன் கேவலமானவன் என்று தனது தீர்ப்பை ரிஷி கூறி முடித்தார்.

மனிதன் தெய்வீகமானவன். ஆனால் இன்று மிருகத்திலும் கீழ்நிலையில் உள்ளான். மிருகங்கள் பறவைகள் தமது தர்மத்தின் வழி வாழ்கின்றன. மனிதன் அதர்ம வழியில் போய்க் கொண்டிருக்கின்றான். மிருகங்கள் தம்மினத்தைக் கொல்வதற்கென்று ஆயுதங்கள் செய்வதில்லை. பசுவானது மனிதன் கழித்த வைக்கோலையும் கழிவுநீரையும் உண்டு சுத்தமான பாலைத் தருகின்றது. அதன் நெஞ்சில் பொறாமை, வஞ்சகம், சுயநலம் என்ற துர்க்குணங்கள் இல்லை. காகம் ஒரு இரையைக் கண்டால் மற்றவர்களை கூவி அழைத்துப் பகிர்ந்துண்ணுகிறது. பழ மரங்கள் எத்தனை பேருக்கு நிழலையும் பசிதீரக் கொடுத்தும் உதவுகிறது. மனிதன் எவ்வளவு பணம் இருந்தாலும் ஏழைகட்கோ ஏன் உறவுகட்கோ உதவி செய்வதற்கு முன்வருவதில்லை. எறும்புகள் கலாசாலையில் கல்வி பயிலவில்லை. ஆனால் ஒழுங்குவிதிகளைக் கடைப் பிடிக்கின்றன.

சைவசமயம் "அன்பே சிவம்" என்றும் கிறிஸ்தவ சமயம் "உன்னைப்போல் அயலவனை நேசி" என்றும் இஸ்லாம் "சகோதரத்துவத்தையும்" பௌத்தம் "அன்பையும் அஹிம்சையையும்" போதிக்கின்றன. எல்லோரும் தத்தம் நெறிப்படி வாழ்ந்தால் உலகமே அன்புமயமாக இருக்கும். பூகோள வேறுபாட்டுக்கமையவும், கலை கலாசாரத்துக்கமையவும் மதங்கள் பல்வேறு பகுதி களில் தோன்றின. இதை அறியாமல் வாழ்க்கையின் குறிக்கோள் தெரியாமல் மனிதன் அற்ப சுகங்களில் ஈடுபட்டு அகங்காரத்தை வளர்த்து பாவ சுமையைக் கூட்டிக்கொள்கிறான். பூமியை நன்றாக உழுது முள், கல் இவற்றை அகற்றி நல்ல விதைநெல்லைத் தெரிந்தெடுத்து விதைக்க வேண்டும். களைகளை அகற்ற வேண்டும், நல்ல விளைச்சலைக் காணலாம். நம் மனத்தையும் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் அகற்றி அன்புடையதாக்க வேண்டும். கலங்கிய குளத்தில் உன் உருவம் தெரியாது. துருப்பிடித்த இரும்பை காந்தம் கவராது. "வெள்ளை நிறப் பூவுமல்ல வேறு எந்த மலருமல்ல. உத்தமமான இறைவன் வேண்டுவது உள்ளக் கமலம். "காய்ந்து போகும் மலர்களையும் அழுகிப்போகும் பழங்களையும் சுமந்து என்னிடம்

*முடியும் என்று நம்புவோருக்கு எதுவும் முடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராதீர்கள். அன்புமயமான உள்ளத்தோடு வாருங்கள் உங்களை நிரப்பி அனுப்புவேன்" பாபா.

ஆகவே நாமும் எம் எண்ணங்களை சீர்செய்து உள்ளம் ஆன்மா சார்ந்து பக்தி நெறியுடனான வாழ்க்கையை வாழ்வோமாகில் இருமை என்கின்ற இன்பம் துன்பம், ஏற்ற இறக்கங்களால் நாம் துவண்டுவிடமாட்டோம் என்பதே நிஜம்.

அசத்தெல்லாம் சத்தாக அஞ்ஞான இருள் ஞான ஒளியாக கொடிய அழிவிலும் சக்தி அமிர்தமாக அருள்வாய் அவனியெல்லாம்.

அமைதி! அமைதி! அமைதி!

---

## கடவுள் பக்தி என்றால் என்ன?

பூலோகத்தில் ஒரே தெருவில் செருப்பு விற்கும் தொழிலாளியும், ஒரு செல்வந்தரும் இருந்தனர். செருப்புத் தொழிலாளி தினமும் தன் செருப்புக்கடையின் ஓரத்தில் பெருமாள் படம் ஒன்றை வைத்து அதை வணங்கி வந்தான். செல்வம் இல்லாவிட்டாலும் சந்தோஷமும் மன அமைதியுடனும் இருந்தான். செல்வந்தரோ தினமும் காலையில் குளித்துவிட்டு, பல மணிநேரம் பூஜை புனஸ்காரம் எல்லாம் செய்வார். பல தலைமுறைக்கு காணும் செல்வம் இருந்தும் நிம்மதியின்றி வாழ்ந்து வந்தார்.

ஒருநாள் நாரத முனிவர் விஷ்ணுவைப் பார்த்து "அந்தச் செல்வந்தர் மிகுந்த பக்திமானாக இருக்கிறார்; தினமும் உங்களுக்குப் பல மணிநேரம் பூஜை எல்லாம் செய்கிறார். அவர் நிம்மதியாய் வாழ, ஏதாவது செய்யக்கூடாதா?" என்றார்.

விஷ்ணுவும் அதற்குச் சம்மதித்துவிட்டு நாரதரை பூலோகத்துக்கு அனுப்பினார். போகும்போது நாரதரைப் பார்த்து "நீங்கள் கீழே சென்று, நான் நாராயணனிடமிருந்து வருகிறேன்; என்று செல்வந்தரிடம் சொல்லுங்கள். அவர் தற்பொழுது நாராயணன் என்ன செய்துகொண்டு இருக்கிறார்?; என்று கேட்பார். அதற்கு நீங்கள் நாராயணன் தற்போது ஓர் ஊசியின் காது வழியாக யானையை நுழைத்துக்கொண்டு இருக்கிறார்; என்று பதில் சொல்லுங்கள்" என்று சொல்லி அனுப்பினார். "அப்படியே அந்தச் செருப்பு தைக்கும் தொழிலாளியையும் போய்ப் பார்த்துவிட்டு வந்துவிடுங்கள்" என்று சொல்லி அனுப்பினார் விஷ்ணு.

நாரதரும் முதலில் அந்தச் செல்வந்தரின் வீட்டுக்கு சென்றார். பூஜை எல்லாம் முடித்துவிட்டு வந்த செல்வந்தர், நாரதரிடம் "நீங்கள் யார்?" என்று கேட்க, நாரதர் தான் நாராயணரிடமிருந்து வருவதாகச் சொல்கிறார். அதற்கு அந்தச் செல்வந்தர் "தற்போது நாராயணன் என்ன செய்துகொண்டு இருக்கிறார்?" என்று கேட்க, நாரதரும் நாராயணன் ஓர் ஊசியின் காதுவழியாக யானையை நுழைத்துக்கொண்டு இருப்பதைப் பார்த்ததாகச் சொல்கிறார். அதற்கு அந்த செல்வந்தர் "அது எப்படி முடியும்? இது என்ன நடக்கிற காரியமா?" என்று கேட்டார். நாரதர் அடுத்தது அந்தச் செருப்புத் தொழிலாளியைப் பார்க்கச் சென்றார். அவரிடமும் இதே சம்பாஷணை நடைபெற்றது. ஆனால் கடைசி பதிலுக்கு அந்தச் செருப்புத் தைக்கும் தொழிலாளி, "இதில் என்ன விந்தை? ஒரு பெரிய ஆலமரத்தை சின்ன விதையில் அடக்கியவர், பிரபஞ்சத்தை தன் வாயில் காண்பித்தவர், அவருக்கு யானையை ஊசியில் நுழைப்பது என்ன பெரிய விஷயமா?" என்று பதில் சொன்னார். அவர்கள் இருவரும் சொன்ன பதிலை நாராயணனிடம் வந்து சொன்னார் நாரதர். கடவுள் பக்தி என்பது, பூஜை, புனஸ்காரங்கள் செய்வது மட்டுமில்லை. இறைவனின் பாதத்தை பூரண நம்பிக்கையுடன், நீயே சரணம் என்று பற்றுவதே "உண்மையான பக்தி" இப்பொழுது தெரிகிறதா? ஏழையின் நிம்மதிக்குக் காரணம் என்று பதிலளித்தார் நாராயணன்.

*தன்னம்பிக்கையே உலகில் மிகச்சிறந்த ஆயுதம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்த சாகரம்

*– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன்* அவர்கள் –

**அன்னை ஸ்ரீ லலிதாம்பிகை**

முத்தேவரும் முத்தொழில் ஆற்றிடவே முன்னின்று அருளும் மஹா முத்துமாரித் தாயே, வித்தே விளைவே சரணம் தாயே. வேதாந்த மகாமாரியே சரணம், சரணம்.

ஆயிரம் கண்ணுடையவள் எங்கள் தேவி. தொழுத கைகளோடும், அழுத கண்களோடும் தன்னிடம் வருவோரின் அல்லல்களையும், இன்னல்களையும் அழித்தொழிப்பவள் அன்னை அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகி, உலகமாதா, ஆயிரம் கண்ணுள்ள எங்கள் தேவி மனோன்மணி அம்பாள் கருணை பொழிவதற்காகவே காத்திருக்கிறாள். நாம் சிந்திடும் கண்ணீரைத் துடைக்கும் சிந்தூர வண்ணப் பெண். தந்திமுகன், அறுமுகன் இரு பிள்ளைகளை ஈன்ற தாய். நம்மையும் அரவணைத்து ஆறுதல் அளிக்கும் தாய். அதனாலேயே ஆயிரம் போற்றிகளில் முதலில் "ஸ்ரீ மாத்ரே நம" என்று வழங்குகிறது ஸ்ரீ லலிதா சஹஸ்ர நாமம். அரியாசனத்தில் ஆட்சிக் கோலத்தில் அன்னை லலிதா பரமேஸ்வரி அமர்ந்து அவளை அண்டி வருவோர்க்கு அருள்புரியக் காத்திருக்கிறாள். அவளைக் காண்போர் கண்கள் குளிரும்! நெஞ்சம் நெகிழும்! துன்பம் அகலும்! வாழ்வில் பேரொளி தெரியும்.

வற்றாத அருட்சுனையாய், வாலைக் குமரியாய், மந்திரவேதமயப் பொருளாய், மாணிக்க ஒளிக்கதிராய், குளிர்வான நிலவாய், நவரத்தினங்களின் குவியலாக, அகத்தியர் தனது ஸ்ரீ நவரத்தினமாலையில் வர்ணித்துள்ளார். எத்தினமும் இசைவாய் இந்த நவரத்தின மாலையைப் பாடித் துதிப்போர், அற்புதசக்தி எல்லாம் அடைந்திடுவர். சக்திபீடங்களில் ஸ்ரீபுரமாக விளங்குவது அன்னை லலிதாம்பிகையின் சந்நிதியேயாகும். ஸ்ரீசக்ர ராஜ சிம்மாசனத்தில் அமர்ந்த கோலம் அது. அன்னையின் திருமுகத்திலிருந்து தோன்றிய வசினீவாத் தேவதைகள் மூலமே வெளிப் பட்டது லலிதா சகஸ்ர நாமம். அந்த அற்புதத் தோத்திரக்கோவை வேதத்திற்குச் சமனமானது. ஸ்ரீவித்யா உபாசகர்களால் அரிய பொக்கிஷமாகப் போற்றப்படுவது. அன்னை ஸ்ரீ லலிதாம்பிகை யைப் போற்றி அனுதினமும் சஹஸ்ரநாம அர்ச்சனையாகவும், பாராயணமுமாகத் துதிப்போர் எண்ணற்ற பலன்களை அடைந்து வருகிறார்கள். சண்டமுண்டாசுரர்களை வதம் செய்த பழி நீங்கிடவே தவமிருந்த அன்னை சாந்த நாயகியாக, அமர்ந்த கோலத்தில் காட்சி தரும் தலமே திருமீயச்சூர். வேறு எந்தத் தலத்திலும் காணமுடியாத பேரழகுடன் மனோன்மணி ரூபத்தில் அரசவையில் ராஜ ராஜேஸ்வரியாக கொலு வீற்றிருக்கும் அன்னையை, முப்பத்து முக்கோடி தேவர்களும் ஆராதிக்க, அந்தவேளையில் அன்னையின் திருவாயினின்றும் வசினீ தேவதைகள் தோன்றி, அவளது புகழை ஆயிரம் நாமங்களாகச் சூட்டி ஆராதித்ததுதான் "ஸ்ரீ லலிதா சஹஸ்ர நாமம்" என்ற அற்புதமான தோத்திரக் களஞ்சியம்.

அன்னை லலிதாம்பிகை, ராஜதர்பாரில் அருளாட்சி செய்யும் மனோன்மணிக்கோலம், சொல்லமுடியாத அழகு, ஞானிகளும், யோகிகளும், மாமுனிவர்களும் அவளைக் குளிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசித்து போற்றிப் பாடிய பாடல்கள்தான் எத்தனை? வேண்டுவோர்க்கு அருள் தந்து காத்திடும் அன்னை அவள்.

அன்னை பராசக்தியே உலகின் சக்திகளுக்கெல்லாம் ஊற்றாக விளங்குகிறாள். சூரியனில் ஒளியாகவும், நீரில் தண்மையாகவும், நெருப்பில் வெப்பமாகவும், பூவில் மணமாகவும் விளங்குகிறாள். இவ்வுலகெங்கும் நிறைந்திருக்கும் அன்னை ஐயன் அளந்தபடி இரு நாழி கொண்டு அகிலமெல்லாம் உய்ய அறம் வளர்த்திட்ட பெருமையுடையவள். காஞ்சிபுரத்தில் சிவபெருமான் அளந்து அளித்த இரண்டுபடி நெல்லைக் கொண்டு உலகமெல்லாம் பசிநீங்கி பிழைக்கும்படி தர்மம் செய்து முப்பத்திரண்டு அறங்களையும் அம்பிகை வளர்த்தாள்.

எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் நிறைந்த நீ
என்னிடத்திலும் இல்லையோ எல்லாமறிந் தெனது
இல்லாமையும் பிணியும் இன்னும் தெரிந்திலையோ
உள்ளத் திகழ்ந்து விடுவாயோ என்பாவம் உனைஅடுத்தாலு முண்டோ
உலகத்து முப்பத்திரண்டறம் வளர்த்தாய் உனக்கின்னும்
இரக்கமில்லையோ....
"இரு நாழி படி கொடறங்காத்த மாபரைச்சி"

-திருப்புகழ்.

அன்னை பராசக்தி பல்வேறு வடிவங்களையும், நாமங்களையும் பெற்றவளாகப் பரவசப்படுகின்றாள். சக்தி வழிபாடே தாய் வழிபாடு. ஆதிசேடன் சக்தியின் சின்னம் என்பர். பாம்பு சக்தியின் சின்னமாகக் கூறப்பட்டிருக்கிறது. நாகதேவதை சக்தியின் வடிவம் முழுமுதற் பொருளாகிய சிவத்திலிருந்து வெளிக்கிளம்பும் ஆற்றலை பராசக்தி என்றும் ஆண், பெண் உருக்கொண்டு வழிபட்டார்கள். சிவமும் சக்தியும் பிரிக்கமுடியாதவை என்கிறது சைவசித்தாந்தம்.

"அருளது சக்தியாகும், மருள் சிவமில்லை" எனவே சக்தியின்றி சிவமில்லை என சிவஞானசித்தியார் கூறுவதும், "அவளன்றி மூவரால் ஆவதொன்றில்லை" என திருமூலர் குறிப்பிடுவதும் பின்னமில்லாமல் இணைந்திருக்கும் சிவசக்தியின் தத்துவமேயாகும்.

பராசக்தியைப் பல வடிவங்களில், பல வழிபாட்டு நிலைகளிலே தரிசனம் கண்டு ஊனும், உள்ளமும் உருகிப் பாடுகிறார் திருமூலர். அவளுடைய அருளாற்றலை அறியாத தேவர்கள் இல்லை. அவளுடைய துணையின்றி எந்தத் தவமும் ஆகாது. அம்பிகையின் ஆற்றலைக்கொண்டுதான் ஐந்தொழில்களும் நடைபெறுகின்றன. பஞ்சமூர்த்திகளும் தேவியினுடைய ஆற்றலினாலே இயங்குகிறார்கள். பராசக்தியின் துணையில்லாமல் முத்தியைப் பெறமுடியாது.

அவளை அறியா அமரருமில்லை
அவளன்றி செய்யும் அருந்தவமில்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை
அவளன்றி ஊர்புகும் ஆறு அறியேனே.

மனிதர்கள், தேவர்கள், முனிவர்கள் ஆகியோர் குனிந்து வீழ்ந்து வணங்கத்தக்க திருவடிகளை அபிராமிப்பட்டரின் தலையில் சூடி அவரைத் தடுத்தாட்கொண்டவள் அன்னை திருக்கடவூர் அபிராமி. மற்றைய தெய்வங்கள் பக்தர்கள் கோரிய வரங்களை அபய, வரத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரங்களால் மட்டுமே அளிக்கக்கூடியவர்கள். ஆனால் தேவியின் திருவடிகளைச் சரணடைந்த வர்கள். கேட்ட வரங்களைவிட மிக அதிகமாகவே தன் திருவடிகளினாலே அன்னை கொடுத்து விடுகிறாளாம்.

உலக பரிபாலனத்தை அன்னை திருமாலின் வடிவத்திலிருந்து செய்து வருவதால், அம்பிகையை "கோவிந்தரூபிணி" என்று லலிதா சஹஸ்ர நாமம் கூறும். அம்பிகையை "முக்திரூபிணி" என லலிதா சஹஸ்ர நாமம் போற்றும். முக்தி நாயகியான அவளை வழிபடு வோர் மரணம், பிறவி இரண்டினையும் எய்துவதில்லை.

அன்னை அபிராமியின் பாதக்கமலங்களில் உண்மையான பத்தி செலுத்தும் அடியார்கள் கலையாத வாழ்வு, நீண்ட ஆயுள், கபடுவராத நட்பு.... ஆகிய பதினாறு பேறுகள் பெற்று வாழ்வார்கள் எனப் பட்டர் அபிராமிப் பதிகத்தில் பாடியிருக்கிறார். ஒப்பற்றவளாகத் திகழும் அன்னையை வணங்கி உதிக்கின்ற செங்கதிர் "உச்சித்திலகம் உணர்வுடையோர்" என்று பாடிவர குறைவற்ற கல்விச் செல்வத்தையும், குன்றாத ஞானத்தையும் அருள்வாள்.

மனதில் நிம்மதி ஏற்பட "பொருந்திய முப்புரை செப்புரை" என்ற பாடலைப் பாடிவர சிவனார் உண்ட நஞ்சினைத் தன் கரத்தால் தொட்டு அமுதாக்கிய அன்னை திரிபுர சுந்தரி. சிறப்புவாய்ந்த அன்னையின் திருவடிகளை தலைமேற்கொண்டால் நன்மை பெருகும்.

"தண்ணளிக்கென்று முன்னே பலகோடி தவங்கள் செய்வார்" இப்பாடலை ஓதிவர இப் பிறவியில் பெருஞ்செல்வம் மட்டுமல்லாமல் மறுபிறவியிலும் அழியாத முத்தி இன்பத்தைப் பெறுவார்கள்.

குழந்தையின் அழுகுரல் கேட்டதும் தாய் ஓடிவருவதுபோல கருணைத் தாயாகிய அம்பிகையும் ஓடி வருவாள். எல்லாத் தெய்வங்களுக்கும் தாயானவளே! புதுமைக்கும் புதுமையானவளே! மெல்லியலாளே! அணைத்தும் அடித்தும் திருத்துபவள் நீ! அன்னையே உன் கடைக்கண் அருளை வேண்டுகின்றேன். அடித்தது போதும். அணைத்திடல் வேண்டும் அன்னையே! அம்மை அப்பா இனி ஆற்றேன்.

அம்மா உன்குழந்தைகளில் நானும் உன் குழந்தையம்மா
கணபதி முதல்பிள்ளை கந்தன்உன் செல்லப்பிள்ளை
அறிவிலி நானும் உன் பிள்ளையன்றோ!
தாயிருக்க சேய் வருந்தலாமா?
இற்றைவரை உனைத்தேடி யான்வருந்த எங்கொளித்தாய்
உருகி உருகி அழுது உனைத் தேடுகின்றேன்
பேய்ப் பிள்ளையாகினும் பெற்றதாய் இகழ்வாளோ?
பிழை பொறுத்து உனது கருணை அள்ளித்தரா தெனைத்
தள்ளிவிடல் நீதியோ?
கூடத்தம்பதியில் வீற்றிருக்கும் தாயே மனோன்மணியே
மலையரசன் அருமைப் பெண் அழகினில் மிகுந்த உமையே
நீயே கதி! என நின் பாதமூலம் பற்றினேன்
காக்க வேண்டும் கருணைத் தாயே.

(தொடரும்....

*ஆயிரம் பேரிடம் யோசனை கேள். ஆனால் முடிவை நீ மட்டும் எடு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழுக்க முழுக்க கருங்கல்லினால் வடிவமைக்கப்பட்ட கேதீச்சரமதைப் பார்த்துக் கண்குளிர வம்மின்கள்! பாடுமின்கள்! தொழுமின்கள்! வரம் பெறுமின்கள்!!

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

அங்கத்துறு நோய்கள் அடியார் மேல் ஒழித்தருளி
வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில்
பங்கம் செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம் பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத்தானே.

மன்னார் மாதோட்ட நன்னகரிலே மூர்த்தி, தலம், தீர்த்தம், கீர்த்தி, தவம், மோட்சம் நிறைந்த அற்புத ஆலயம் திருக்கேதீஸ்வரமாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும், திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளாலும் பாடப்பெற்ற திருத்தலம் இதுவாகும். அகத்தியர், கேது, இராவணன், இராமபிரான், துவஷ்டா[illegible]ானி, மயன், மண்டோதரி, அருச்சுனன், விசயன், உபதிஸ்ஸ, மாதேவடிகள் ஆகியோரால் போற்றி வணங்கப்பட்ட புராதன ஆலயமாகும். கேதுவின் மான்மியம் விசேடமானது.

வைகாசி மாதம் விசாக நட்சத்திரம் கூடும்பொழுது, சிவன் கௌரியம்பாளொடு பாலாவித் தீர்த்தக்கரையில் இடப வாகனத்தில் கேதுவுக்குக் காட்சியளித்ததாகப் புராணங்கள் இயம்பும். சிறப்பாக சோடசோபசாரம் பதினாறில், கேது அர்ப்பணித்தவை ஏழாகும். பாத்தியம், பாத்தியப் பொருள்கள் அருக்கியம், ஆசமனீயம், ஆசமனீயப் பொருட்கள், திருமஞ்சனம், ஆவாகனம் என்பவை அவையாம். கேதுவின் இக்கைங்கரியமே பஞ்சகிருத்தியத் திருநடனக் காட்சியை வெளிக்கொணர்ந்தது. திருக்கேதீஸ்வர நடராஜப் பேரவையில் சிவபெருமான் பஞ்சகிருத்திய மூர்த்தியாகக் காட்சி தருகின்றார். உடுக்கை, அபயகரம், ஏந்திய அக்கினி, ஊன்றிய திருவடி, தூக்கிய திருவடியோடு அதிசயமாகியுள்ளான்.

சிவபெருமானது வெற்றிச்சின்னமாக விளங்குகின்ற மேருமலையினை வில்லாகவும், வாசுகி என்ற பாம்பினை நாணாகவும், எரிகின்ற நெருப்பை அம்பாகவும் கொண்டு போரிட்டு முப்புரங்களையும் எரித்த இறைவன் உறையும் பதியாக மாதோட்டம் விளங்குவதனால், 06.07.2022இல் நடைபெற்ற மகா கும்பாபிஷேகம் சகல பேறுகளையும் அள்ளித்தருகிறது. மேலும்:-

மாதோட்டம் கருதநின்ற கேதீச்சரங் கைதொழக்
கடு வினை அடையாவே;

கேடிலாத கேதீச்சரம் தொழுதெழக்
கெடுமிடர் வினை தானே;

*தேடல்கள் இல்லாத வாழ்க்கையும் இல்லை. தேவைகள் இல்லாத நாட்களும் இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சையின் உழல்பவர் உயர்தரு
மாதோட்டத்து அண்ணல் நண்ணு
கேதீச்சரம் அடைபவர்க்கு அருவினை
அடையாவே;

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த திருப்பதிகமான, "நத்தார் படை" முதலான பத்துப் பாடல்களையும்,

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிய "விருது குன்றமா மேருவில்" முதலான பதினொரு பாடல்களையும் பய பக்தியோடு பாலாவித் தீர்த்தமருகே இருந்து ஓதுவோமாக இருந்தால் நினைத்ததும் கேட்டதும் கிடைத்தே தீரும். பரகதியும் பெறலாம்.

பாலாவித் தீர்த்தம் பாவங்களைத் தவிடுபொடியாக்கிவிடும். அதனால் எந்தப் பாவத்தையும் செய்யலாம் என்ற கருத்துக்கொள்ளலாகாது. பஞ்சமா பாதகங்களைச் செய்வோருக்குப் பாலாவித் தீர்த்தமானது தக்க தண்டனையோடு மீண்டெழவும் திருந்தவும் உணரவும் வழி சமைக்கும்.

பென்னாம் பெரிய சிற்பாலயமாக; பொற்புடன் நடனஞ் செய்கின்ற சிவாலயமாக; மட்டுண்டு வண்டாலும் பொழில் மாதோட்ட சித்திரமாக கேதீஸ்வரம் அடியார்களுக்கு வரமாகிறது.

இலங்கையில் சிவத்தலங்களினாலேயே தவப்பேறும் - சிவப்பேறும் - குலப்பேறும்- சுகப்பேறும் மக்களுக்குக் கிடைக்கின்றது. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பும் அதற்குப் பின்பும் இது உள்ளவாறு உணர்த்தப்படுகிறது. பொலநறுவைச் சிவன் ஆலயம் எப்போது புனருத்தாரணம் செய்து; கருங்கல் சிற்பாலயமாக உயிர் பெறுகிறதோ அன்றுதான் இலங்கை, உலகிற்கும் எமக்கும் வரமாகும். திருக்கேதீஸ்வரம்போல பொலநறுவைச் சிவன் ஆலயமும் இந்தியாவின் உதவியோடு உச்சம்பெற இலங்கையின் சமய நிறுவனங்கள் நித்திரையும், விளம்பரமும் கொள்ளாது உருப்படியோடு விருப்பம்கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| திருக்கேதீஸ்வரம் | திருக்கோணேஸ்வரம் | முன்னேஸ்வரம் |
| நகுலேஸ்வரம் | தொண்டீஸ்வரம் | தான்தோன்றீஸ்வரம் |

ஆகிய ஈஸ்வரங்களோடு, பொன்னம்பலவாணேஸ்வரம், வைத்தீஸ்வரம், பசுபதீஸ்வரம் என இலங்கை புண்ணியமாகிறது. கதிர்காமக் கல்வெட்டு ஒன்றிலே, பௌத்த ஆலய விதிகளை மீறி நடப்பவர்களுக்கு மாதோட்டத்தில் பாவத்தைப் பெறுவார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சிவபூமியாம் இலங்கை, பஞ்சம், பசி, பட்டினி, கொலை, களவு, போதை விபச்சாரம், ஊழல், போராட்டம் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு நிலையான சமாதானமும், சாந்தியும் நிலவ வேண்டுமானால் மேலே கூறப்பட்டுள்ள அனைத்தையும் நாம் கடைப்பிடித்தால் அவனருளோடு கூடிய சாந்தி கிடைக்கும் என்பது திண்ணம்.

---

ஒவ்வொருவரின் தலைமேல் உள்ளது ஒரே ஒரு ஆகாயம்தான்! ஒவ்வொருவரின் பாதங்களின்கீழ் உள்ளது ஒரே பூமி. எல்லோரும் சுவாசிப்பது ஒரே காற்று. எதற்கு ஒருவர் மேல் ஒருவருக்கு துவேஷமும் வெறுப்பும்? எதற்காக உங்களிடையே இத்தனை வேறுபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனுடன் நேரில் தொடர்புகொண்ட இறையருட் செல்வர்கள் வரிசையில் சாவித்திரி

– திரு மூ. சிவலிங்கம் அவர்கள் –

## காரடையா நோன்பிருந்து எமனுடன் போராடிக் கணவனின் உயிர்மீட்ட கற்புக்கரசி

பரத கண்டத்தில் மந்திரதேசம் என்னும் நாடு நீர்வளம், நிலவளம், கல்வி கலைவளம் மிகுந்த புண்ணிய பூமியாக அமைந்துள்ளது. இப்புண்ணிய பூமியை அரசாண்ட மன்னன் அசுவபதி என்பவன் நீதி திறம்பாத அரசநீதி வழுவாத குடிமக்கள்மீது குறையாத பேரன்புடன் செங்கோலோச்சி யாவராலும் போற்றப்பட்டான். அசுவபதியுடன் பட்டத்து இராணியான மானசதேவி என்பவளும் மன்னனின் செங்கோலாட்சிக்கு உறுதுணையாகத் திகழ்ந்தாள். நல்லறம் பேணி இல்லறம் காத்த அரச தம்பதியினரின் எதிர்காலப் பூரணமான இனிய வாழ்வைச் சிறப்பிக்க வென மழலைச் செல்வம் இல்லையே என வாடினர்.

அசுவபதி மன்னன் தீராத மன வேதனையால் முகம் வாடியிருந்தவேளை ஒருநாள் நாரத முனிவர் அரசனை நாடி வந்தார். மன்னன் நாரத முனிவரை இன்முகம் காட்டி வரவேற்று உபசரித்தான். முக்காலத்தையும் முக்குணங்களையும் நன்கறிந்த முனிவர் மன்னனின் மனவேதனையை நோக்கினார். எல்லாம்வல்ல சாவித்திரிதேவிக்கு யாகங்கள் செய்து வழிபட்டால் கவலை நீங்கி யாவும் சித்தியாகும் என நாரதமுனிவர் மன்னனிடம் கூறினார். மேலும் மன்ன னின் பரிதாப நிலையை நோக்கியதால் தாமே வேண்டிய யாவற்றையும் மேற்கொண்டு சாவித்திரிதேவியை வேண்டி யாகஞ் செய்தார்.

நாரதமுனிவரால் மன்னன் செய்த யாகத்தின் சிறப்பால் மகிழ்ந்த சாவித்திரிதேவி தோன்றினாள். தனது அம்சம் பொருந்திய மகள் கிடைப்பாள் என்று கூறி மறைந் தருளினாள். சாவித்திரிதேவியின் பேரருளால் பட்டத்து இராணியான மானசதேவி கருவுற்றாள். உரிய காலத்தில் பெண் மகவொன்றைப் பெற்றெடுத்தாள். சாவித்திரிதேவியின் பேரருளால் பிறந்த பிள்ளைக்குச் "சாவித்திரி" என நாமம் சூட்டி அன்புடன் அரவணைத்து வளர்த்தனர். சாவித்திரி சிறந்த விவேகத்துடன் கல்வி கலைகளில் நன்கு சிறந்து விளங்கினாள். மன்னன் தமது அரசின் எதிர்காலத்தை நோக்கி சாவித்திரிக்கு வேண்டிய அரசுமுறைப் பயிற்சி களையும் பெற வைத்தான். இவ்வாறு பல சிறப்புக்களையும் பெற்ற சாவித்திரி பருவ மங்கையானாள்.

அசுவபதி மன்னன் எல்லாச் சிறப்புக்களும் நிறையப்பெற்ற தன் மகளுக்கு ஏற்ற கணவனைத் தேட முற்பட்டான். மன்னனின் முயற்சி கைகூடவில்லை. மன்னன் மகளை நோக்கி நீயே சென்று உனக்கு விரும்பிய வரனைத் தேடிக் கண்டறிந்தால் உனது திருமணத்தை

*எதையும் எதிர்கொள்வேன் என்ற மனநிலை மட்டுமே நம்பிக்கையைக் கொடுக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பாடு செய்யலாமென்றான். தந்தையின் பரிந்துரையைக் கேட்ட சாவித்திரி தயக்கத்துடன் சம்மதித்தாள். மன்னனின் ஏற்பாட்டில் சாவித்திரி தமது சேடியருடன் தேரிற் செல்லவும் மெய்ப்பாதுகாவலர் மற்றும் அரச படையினர் புடைசூழ சாவித்திரி புறப்பட்டாள்.

சாவித்திரி தனக்குத் தகுந்த வரனாக அமைபவரின் சகல தகவல்களையும் நன்கறிந்தே தேட முற்பட்டவள் அரச பரம்பரையில் எந்த நாட்டிலும் அமையவில்லை. கானகங்களில் வாழும் முனிவர்களை நாடி அவர்களுக்கான தான தருமங்களைச் செய்தும் அவர்களின் ஆசியையும் பெற்றாள். சாவித்திரியின் பயணம் தொடர்ந்தது. சாவித்திரி பெரிய கானகமொன்றில் அமைதியான சூழலில் அமைந்த குடிசை ஒன்றை நாடினாள். அக்குடிசையில் சாலுவ நாட்டரசனான தியுமத்சேனனும் அவர் தம் மனைவியுடன் மகன் சத்தியவானும் வாழ்ந்தனர். தியுமத்சேனன் அரசராக இருந்தபோது கண் பார்வை இழந்ததால் பகையரசன் தியுமத்சேனனுடன் போர்புரிந்து நாட்டைக் கைப்பற்ற முனைந்தான். போரிட ஆற்றலில்லாததால் தியுமத்சேனன் மனைவியையும் இளவரசனான சத்தியவானையும் அழைத்துக்கொண்டு இக்கானகத்தை அடைந்தனர். இங்கு வாழ்ந்த முனிவர்களும் அமைதியுடன் வாழ்ந்ததால் இவர்களும் இங்கு குடிசை அமைத்து வாழ்ந்தனர்.

இக் குடிசையை நாடிய சாவித்திரி அங்குள்ள சத்தியவானைக் கண்டதும் அவனிடம் மனதைப் பறிகொடுத்தாள். அவனின் அழகில் மயங்கிய சாவித்திரி சத்தியவானையே தனது கணவனாக ஏற்பதாக உறுதிபூண்டாள். பின்னர் நாடு திரும்பத் தீர்மானித்துப் பெற்றோரிடம் வந்தடைந்தாள்.

அசுவபதி தனது மகள் ஒரு தக்க வரனைத் தேடியிருப்பாள் என்றெண்ணிச் சாவித்திரியை அழைத்தான். வரனைத் தேடிய விபரங்களைக் கேட்டான். அச்சமயம் நாரத முனிவரும் அவ் இடத்திலிருந்தார். சாவித்திரி தான் பல தேசங்களுக்குச் சென்றதாகவும் ஒரு தேசத்து இளவரசரேனும் மனதைக் கவரவில்லையென்றும் கானகத்தில் வதியும் முன்னாள் சாலுவ தேசத்து மன்னன் தியுமத்சேனனின் மகன் சத்தியவான் என்னும் இளவரசனைக் கண்டதும் அவர்மீது மனதைப் பறிகொடுத்ததாகவும் அவரையே கணவராக ஏற்றுக்கொள்வதாக உறுதி பூண்டதாகவும் தெரிவித்தாள். இதைக் கேட்டதும் மன்னன் நாரத முனிவரை நோக்கினான்.

நாரத முனிவர் மன்னனை நோக்கி அரசே! உன் மகள் இந்த இளவரசன்மீதா மனம் வைத்தாள். சத்தியவான் மிகவும் நல்லவன். சகல கலைகளிலும் வல்லவன்; வீரன். சத்தியத்தைக் கடைப்பிடிப்பவன். இதனாலேயே சத்தியவான் என்னும் பெயரைக் கொண்டவன். சகல ஆற்றலும் மிக்கவன். ஆனால் இவனின் ஆயுள் இன்னும் ஒரு வருடம்தான் என நாரத முனிவர் நயம்பட உரைத்தார். இதைக் கேட்டதும் அரசன் மகளை நோக்கி வேறொரு கணவனைத் தெரிவுசெய்யுமாறு கேட்டான். தந்தையின் பேச்சைக் கேட்ட சாவித்திரி தான் சத்தியவானையே கணவராக ஏற்றதாகவும் ஒரு வருடமல்ல ஒரு நாளாவது அவருடனேதான் வாழ்வதாகவும் உறுதியாகக் கூறினாள்.

இதேவேளை நாரத முனிவர் அசுவபதியை நோக்கி அரசே இவளைச் சத்தியவானுக்கே திருமணஞ் செய்து வைப்பது நல்லது. இவள் தனது திருமாங்கல்யப் பாக்கியத்தால் எமனையும்

*துயரங்களை நினைத்து துன்பப்படுவதைவிட உயரங்களை நினைத்து உத்வேகப்படுத்திக்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்லுவாள் என ஆசி கூறினார். மேலும் இவள் சாவித்திரி தேவியைச் சரணடைந்து நோன்பு நோற்றால் அன்னையின் ஆசியுடன் யாவும் நல்லபடி நடக்கும் என்று கூறினார். மகளின் மனஉறுதியையும் நாரத முனிவரின் ஆசீர்வாதத்தையும் நோக்கிய அசுவபதி கானகஞ் சென்று தியுமத் சேனனைக் கண்டு தனது மகள் சாவித்திரியின் மனஉறுதி பற்றிக் கூறி அவளைச் சத்தியவானுக்கே திருமணஞ் செய்து வைப்பதாகவும் ஒரு சுப வேளையில் திருமணத்தை வெகு சிறப்பாகச் செய்து வைத்தான். சாவித்திரியும் கணவனும் கானகஞ் சென்று இல்லறத்தில் இணைந்தனர். கணவன், மாமன், மாமிக்கு ஏற்ற பணிவிடை செய்து மகிழ்ந்தாள். நாரத முனிவர் கூறியபடி கணவனின் ஒருவருட ஆயுள்பற்றி எவருடனும் பகரவில்லை.

கணவனின் ஒரு வருடகால ஆயுளை எண்ணித் தனது மாங்கல்யப் பாக்கியம் நிலைக்க எண்ணினாள். சாவித்திரி நோன்பு நோக்க ஆரம்பித்தாள். சாவித்திரிதேவியைத் தமது இதயத்துட் பதித்து இடையறாது பூசித்தாள். அமாவாசை, பௌர்ணமி, அட்டமி, சதுர்த்தசி, முதலிய நாட்களில் சாவித்திரிதேவியிடம் தனது மாங்கல்யப் பாக்கியம் நிலைத்திடத் தவமிருந்து பூசித்தாள். நாரத முனிவர் குறிப்பிட்டபடி நாட்களைக் கணக்கிட்டதால் உரிய காலம் வந்ததை அறிந்தாள். பங்குனி மாதம் முதல் நாளன்று வழமைபோல அதிகாலையில் எழுந்து தேவியை முறைப்படி பக்திபூர்வமாகப் பூசித்துப் பாரணை செய்யாது அம்பிகையைச் சரணடைந்தாள்.

இதே நாளன்று சத்தியவான் விறகு வெட்டுவதற்காகக் கோடரியுடன் காட்டுக்குப் புறப்பட்டான். கணவனின் வாழ்க்கை நியதியை முன்கூட்டியே அறிந்ததால் ஒரு வருட காலம் அவனுடன் இணை பிரியாதிருந்தாள். அன்று கணவனுடன் தானும் காட்டுக்குச் செல்ல முற்பட்டாள். ஆனால் சத்தியவான் அவள் காட்டுக்கு வர மறுத்தான். சாவித்திரி மாமன் மாமி யரின் அனுசரணையுடன் கணவனால் அழைத்துச் செல்லப்பட்டாள். சாவித்திரியின் காரடையா நோன்பு என்னும் சாவித்திரி விரதத்தின் பயனும் அவளின் தெய்வ நம்பிக்கையின் வலுவும், மனஉறுதியும் உடன் வரவும் சாவித்திரி அம்பிகையைத் தியானித்தவாறு கணவனுடன் கானகம் சென்றாள்.

சத்தியவான் தனது கோடரியால் ஒரு மரக்கிளையை வெட்டினான். அச்சமயம் சத்தியவானின் கண்கள் மங்கி, தலைசுற்றி, அறிவிழந்து தனக்கு மயக்கம் வருவதாகக் கூறியதும் கீழே சாய்ந்து வீழ்ந்தான். அன்று இவ்வகையான நிகழ்வு வருமென எதிர்பார்த்திருந்த சாவித்திரி சத்தியவானின் தலையைத் தன் மடிமீது வைத்துக்கொண்டு மனம் பதைக்க அம்பிகையை இடையறாது துதித்தாள். இதே சமயம் சத்தியவானின் உயிரைக் கவர வந்த எமதூதுவர்கள் கிட்ட அணுகாதவாறு சாவித்திரியின் கற்புக்கனல் தடுத்தது. செய்வதறியாத எமதூதர் உடன் சென்று எமதர்மனிடம் தெரிவித்தனர். இதைக் கேட்டதும் எமதர்மன் தானே சத்தியவானிடம் நேரிற் சென்றான்.

கணவனின் தலையைத் தன் மடிமீது வைத்திருந்துகொண்டு சாவித்திரிதேவியைப் பிரார்த்தித்துக்கொண்டிருந்த சாவித்திரியின் முன் எமதர்மன் தோன்றினான். எமதர்மன் சாவித்திரியை நோக்கி "சாவித்திரி உனது கணவனின் ஆயுள் இன்றுடன் முடிவடைகிறது. அவனின்

*உன் மனம் வலிக்கும்போது சிரி. பிறர் மனம் வலிக்கும்போது சிரிக்கவை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரை எடுத்துச்செல்லவே வந்தேன். நீ பதிவிரதையானதால்த்தான் உன் கண்களில் நான் தென்படுகிறேன்" என்று கூறிச் சத்தியவான்மீது பாசக்கயிற்றை வீசி உயிரைக் கவர்ந்தான். தனது கணவனின் உடலிலிருந்த உயிரை எமதர்மன் பிரித்தெடுத்துச் சென்றதும் சாவித்திரிதேவி விரைந்து செயற்பட்டாள். தன் மடியிலிருந்த கணவனின் உடலை மிருகங்கள், பறவைகள் தீண்டாதவாறு இலை குழைகளால் மறைத்து வைத்துவிட்டு எமதர்மனைப் பின் தொடர்ந்தாள். சாவித்திரி தன்னைத் தொடர்ந்து வருவதைக் கண்ட எமன் அவளை நோக்கித் தன்னைப் பின் தொடராது திரும்பிச் செல்லுமாறு கூறினான். அதுகேட்ட சாவித்திரி ஒரு கணவனின் உயிர் எங்கிருக்கிறதோ அங்கிருப்பதுதான் ஒரு பதிவிரதையின் கடமை என்றாள்.

அதைக் கேட்டதும் எமதர்மன் சாவித்திரி கூறுவதில் நியாயம் இருப்பதால் கணவனின் உயிரைத் தவிர வேறேதாவது வரம் கேள் என்றான். இதைக்கேட்ட சாவித்திரி மாமனாரின் கண் பார்வை கிடைக்க வரம் கேட்டாள். வரத்தை நல்கிய எமன் தொடரவும் சாவித்திரியும் பின் தொடர்ந்தாள். எமன் தொடர்ந்து வருவதன் காரணத்தைக் கேட்டபோது சாவித்திரி கணவன் இருக்கும் இடமே தனது வீடாகுமென்பதால் அவரின் உயிர் இருக்கும் இடத்திற்கே செல்கிறேன் என்றாள். இதைக் கேட்டதும் எமன் உன் கணவனின் உயிரைத் தவிர இன்னுமொரு வரம் கேள் என்றான். சாவித்திரி மாமன் இழந்த இராச்சியத்தை மீண்டும் கிடைக்கவேண்டினாள். அந்த வரத்தையும் வழங்கிய எமன் சென்றான்.

இவ்வாறு தொடர்ந்து சென்ற சாவித்திரி மூன்றாம் வரத்தில் தனது பெற்றோருக்கு நூறு பிள்ளைகள் கிடைக்கவும் வரம் பெற்றாள். நாலாம் வரத்தில் தனக்கு நூறு பிள்ளைகள் கிடைக்கவேண்டுமென்றும் கிடைக்கப்பெற்றாள். உடனே சாவித்திரி "எமதர்ம ராசாவே பதிவிரதையாகிய நான் எனது கணவன் இல்லாமல் எவ்வாறு நூறு பிள்ளைகளைப் பெறுவது" என்றாள். மேலும், "எனது வரம் சித்தியாவதற்குக் கணவனின் உயிரைத் திருப்பித் தருவதே நியாயமாகும்" என்றாள். சாவித்திரியின் பதிவிரதா தர்மமும் மதிநுட்பமும் மெச்சத்தக்கது. உன்போன்று கணவரை நேசிப்பவர் எவரும் இல்லை. மேலும் உனது புத்திசாதுரியம் என் ஆற்றலை வலுவிலக்கச் செய்தது என்றான். எமதர்மன் தனது வரம் முறைப்படி சித்தியாவதற்காக சத்தியவானின் உயிரைத் திருப்பிக் கொடுத்தான். தன்னுடன் வாதாடிக் கணவனின் உயிரை மீட்ட சாவித்திரியை நோக்கிய எமதர்மராசன் நீவிர் நோய்நொடியின்றிப் பல்லாண்டுகாலம் வாழ்ந்து நூறு பிள்ளைகளைப் பெற்று வாழ நல்லாசி கூறி மறைந்தருளினான்.

சாவித்திரி ஓடோடிச் சென்று கணவன் உயிர் பிரிந்த இடத்தை அடைந்தாள். சத்தியவான் தூங்கி எழுந்ததுபோல் உயிர் பெற்றெழுந்தான். சாவித்திரி சத்தியவானுடன் சாவித்திரிதேவியைத் துதித்து இறையருளை வியந்தனர். இருவரும் ஆச்சிரமத்தை அடைந்தபோது தியுமத்சேனன் கண்பார்வை பெற்றதையிட்டு மகிழ்ந்தனர். பதிவிரதையான மருமகளைக் கண்ணாரக் கண்டு தியுமத்சேனன் மகிழ்ந்தான். பின்னர் காட்டில் சத்தியவானுக்கு ஏற்பட்ட விளைவையும் எமதர்மனுடன் வாதாடிப் பெற்ற வரங்களையும் கணவனின் உயிர்மீட்ட யாவற்றையும் விபரமாகக் கூறினாள். இவ்விபரங்களுடன் சத்தியவானின் உயிர் திரும்பப்பெற அருளிய சாவித்திரிதேவியின் பேரருளை வியந்த சாவித்திரி தான் காரடையா நோன்பு என்னும் சாவித்திரி விரதத்தை ஒரு

*உன்மீது உனக்கு நம்பிக்கை இல்லையென்றால் கடவுள் நேரில் வந்தாலும் பயனில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடமாக மேற்கொண்டதையும் நோன்பு நோற்போரைச் அன்னை நல்லருள் பாலித்து உய்வித்தாள் என்பதையும் கூறியதும் யாவரும் மீண்டும் சாவித்திரிதேவியை உள்ளன்போடு துதித்து இன்புற்றனர்.

நடந்தவை யாவும் நற்செய்தியாக அமைந்தன. சாலுவதேசத்தை ஆண்ட கொடிய மன்னனின் கொடுமை தாங்காத மக்கள் ஒன்றுகூடி அவனைக் கொன்றனர். இதையறிந்த தியுமத்சேனன் தனது நாட்டுக்குச் சென்று அரசைப் பொறுப்பேற்றுச் செங்கோலோச்சினான். தியுமத்சேனனின் கண்பார்வை கிடைத்ததையும் சாவித்திரி தமது பதிபக்தியும் சாவித்திரி தேவியின்மீது காரடையா நோன்பிருந்து சாவித்திரிதேவியின் பேரருளால் எமனை வாதாடி வென்று சத்தியவானின் உயிரை மீளப் பெற்றதையும் யாவரும் பெருமையுடன் கூடிப்பேசி இன்புற்றனர். தந்தையின் பின் சத்தியவான் அரசாண்டான். யாவரும் மகிழ்ந்தனர்.

சாவித்திரி கடைப்பிடித்த காரடையா நோன்பு என்னும் சாவித்திரி விரதத்தின் நற்பலனாக இன்றுவரை இவ்விரதம் பக்தியுடன் கடைப்பிடிப்பதை யாவரும் அறிவோம்.

## ஆற்றங்கரையான் அழகு

ஆற்றங்கரையானின் அன்னதானம் அழகு - எங்கள்
பூவரசு வாழுகின்ற வேலின் அழகு
வெற்றி வேலின் அழகு - எங்கள்
ஆற்றங்கரை வேலனின் கோடி அழகு.

(ஆற்றங்கரையான்...)

ஆழ்கடல் ஓரத்தில் வந்து அமர்ந்திட்ட ஆற்றங்கரை வேலவா - எங்கள்
நீள் துயர் போக்கிடும் நித்திய வேலனே - சந்நிதியின் குமரா!
ஆலமிலையில் எங்களுக்கு நீ நல்லமுது தந்தாய்
ஆறுதல் தந்திடுவாய் ஆறு தலை நாயகா!

(ஆற்றங்கரையான்...)

புற்றுநோயையும் நீக்கிடவே புறப்பட்ட நாயகனே!
பற்றுடன் உனை நாடிவருவோர்க்கு நல்லருளை தந்தாய்
தீராத நோய் எல்லாம் தீர்த்திடுவாய் ஆற்றங்கரை வேலா
சோராத அன்னத்தையே அள்ளியே தந்தாய் அன்னதானக்கந்தா!
உனை எண்ணித்துணிகையில் என்மனம் ஆறுதே ஆற்றங்கரைவேலா!

(ஆற்றங்கரையான்...)

புள்ளிமயில் ஏறி புன்னகை பூத்திடும் ஆற்றங்கரை வேலா!
வள்ளி குறமகளோடு வலம் வரும் சந்நிதியின் குமரா!
அள்ளி எறிந்திடும் உந்தன் அழகினில் நாங்கள் மயங்கிடுவோம்
மண்ணில் உதித்திடும் எந்தப் பிறப்பையும் மகிழ்வுடன் ஏற்றிடுவாய்!
வாழ்வதனை பெற்றிட உந்தனை வேண்டினால் யாவையும் நீ தருவாய்!

(ஆற்றங்கரையான்...)

-அ. அமுதாஸ்-

*கனவு என்பது தூக்கத்தில் காண்பது அல்ல. உங்களைத் தூங்கவிடாமல் செய்வது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா சிவராத்திரியை முன்னிட்டு பக்தர்களுக்கு இறைவனின் செய்தி!

– திரு பி.கே. மகேந்திரன் அவர்கள் –

உலகிலுள்ள மனிதர்கள் அனைவரும் ஒரே இறைவனையே வெவ்வேறு மதங்களில் வெவ்வேறு பெயர் கொண்டு வழிபட்டுவருகின்றனர் இறைவனாகிய பரமாத்மா சிவனே சற்குருவாகி அனைத்து மனித ஆத்மாக்களுக்கும் முக்தியையும், தனது உண்மையான பக்தர்களுக்கு முக்தியுடன் சற்கதியாகிய ஜீவன் முக்தியையும் அருள்பவர் ஆவார். அவரே கலியுகத்தின் இறுதியில் துன்பத்திலிருக்கும் மனித ஆத்மாக்களின் துன்பத்தை நீக்கி, அனைவருக்கும் உண்மையானதும் நிலையானதுமான அமைதியையும் சந்தோசத்தையும் அருள்வதற்காக இப் பூவுலகில் ஓர் மனித சரீரத்தில் அவதாரம் எடுக்கின்றார். அதுவே கல்கி அவதாரம் எனப்படுகிறது. அவரின் இந்நிகழ்விற்காக வேண்டியே சிவனின் பக்தர்கள் தமது தீவிர பக்தியை வெளிப்படுத்தி சிவராத்திரி தினத்தை அதி முக்கியத்துவம் வாய்ந்த பக்திபூர்வமான தினமாக அனுஷ்டித்து வருகின்றனர்.

பரமாத்மா சிவன், தன்னைப் பிறவி பிறவியாக பல பிறவிகளுக்கு நீண்டகாலமாக பக்தி செய்துவரும் தனது உண்மையான பக்தர்களுக்கு அவர்களது பக்தியையும் அன்பையும் ஏற்று அதற்குப் பிரதிபலனாக ஞானிகள், முனிவர்கள் உட்பட மனிதர்கள் எவரும் அறிந்திராத பரம இரகசியமான தனது ஞானத்தை பரிசாகக் கொடுக்கிறார். அதனாலேயே சிவனின் ஞானமாகிய இராஜயோகக் கல்வியே அவரது பக்தர்களுக்கு மட்டுமே கிடைக்கின்ற ஞானப்பழம் என்று அழைக்கப்படுகின்றது. முக்காலத்தையும், மூவுலகங்களையும் பற்றிய அந்த ஞானமே தனது பக்தர்கள் மீது இறைவன் காட்டும் கருணையும், அன்பும், நற்செய்தியுமாகும்.

உலகில் மனித வரலாறு ஆரம்பிக்கும்போது மனித ஆத்மாக்களான நாம் எமது இனிய வீடாகிய ஆத்ம உலகிலிருந்து இந்த உலகமென்ற நாடகமேடையில் எமது பாகங்களை நடிக்க வந்தோம். உலகின் ஆரம்ப காலத்திலிருந்து அரைக்கால பகுதியான சத்திய, திரேதா யுகங்களில் ஆத்மாக்களான நாம் தொடர்ந்து பல மறுபிறவிகளை எடுத்தபோதும் நாம் ஆத்மாக்கள் என்ற உணர்வுடனேயே வாழ்ந்துவந்தோம். நாம் ஒவ்வொரு பிறவியிலும் நிலையான அமைதியையும், செல்வச்செழிப்புமிக்க எல்லையற்ற சந்தோசத்தையும், அகால மரணமற்ற முழுமையான ஆரோக்கியத்துடன் கூடிய நீண்ட ஆயுளையும் கொண்டிருந்தோம். அக்காலமே இறைவனால் படைக்கப்பட்ட இயற்கை வளமும், அழகும் நிறைந்த சுவர்க்கமாகும்.

சுவர்க்கத்தில் மனிதர்கள் மட்டுமன்றி மிருகங்களும்கூட ஒற்றுமையாகவே வாழ்ந்துவந்தன. முழு உலகிலும் ஒரு மொழி, ஒரு தர்மம், ஒரு இராட்சியமே நிலவியிருந்தது. அன்றைய காலத்தில் வாழ்ந்த மனிதர்களே தேவர்கள் என அழைக்கப்பட்டனர். இயற்கை உட்பட பஞ்ச தத்துவங்களும் உலகை ஆட்சிசெய்துவந்த தேவர்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்ததுடன்,

*தளராத இதயம் உள்ளவனுக்கு இவ்வுலகில் முடியாதது என்று எதுவுமில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையும் சந்தோசத்தை மட்டுமே கொடுத்துவந்தன. அக்காலத்தில் தங்கமும் வைரமும் மிகவும் மலிந்து காணப்பட்டதால் தேவர்கள் வைரம் பதிக்கப்பட்ட தங்க மாளிகைகளிலேயே வாழ்ந்துவந்தார்கள். அத்துடன் அரசர்களும் செல்வந்தப் பிரைஜைகளும் தமது போக்குவரத் திற்காக வெவ்வேறு வடிவங்களில் வடிவமைக்கப்பட்ட அழகிய புஷ்ப்பக விமானங்களையே பயன்படுத்திவந்தனர். சுவர்க்கத்தில் தூய விஞ்ஞானத்தின் சக்தியே இருந்தமையால் விஞ்ஞானத் தின் படைப்புகள் அனைத்தும் இயற்கையை பாதிக்காத, பழுதடையாத, முதற்தரமானவை யாகவே காணப்பட்டன. தேவர்கள் எந்த ஒரு தீய குணமும் அற்றவர்களாக, சகல நற்பண்பு களுடன் வாழ்ந்து வந்தனர். இதனால் அவர்களின் செயல்களில் பிறருக்கு துன்பத்தை விளைவிக்கின்ற பாவச் செயல்கள் எதுவும் இருக்கவில்லை.

முதலில் சத்திய யுகத்தை சூரிய வம்சத்தினரும், பின்னர் திரேதாயுகத்தை சந்திர வம்சத்தினரும் ஆட்சி செய்துவந்தார்கள். அக்காலத்தில் உலகை ஆண்ட அரசர்கள் மட்டுமன்றி பிரஜைகளும்கூட எந்தவொரு குறையோ, தேவைகளோ இன்றி நிறைவான சந்தோசத்தை மட்டுமே அனுபவித்து வந்தனர். இதனால் அங்கு எவருமே இறைவனை நினைவு செய்யவோ, வழிபடவோ வேண்டிய தேவை ஏற்படவில்லை. எனவே தேவர்கள் அனைவரும் தம்மைப் படைத்த இறைவனை மறந்துபோயிருந்ததுடன் இறைவனைப்பற்றிய எந்தவித ஞானமும் அற்றவர்களாகவே வாழ்ந்துவந்தார்கள். சத்திய யுகத்தின் ஆரம்பத்தில் தேவர்கள் ஆட்சி செய்யத் தொடங்கியபோது உலகம் முழுவதிலும் அரசர்கள் பிரைஜைகள் உட்பட மில்லியன் எண்ணிக்கையான ஆத்மாக் களே இருந்தார்கள். ஆனால் படிப்படியாக கூடிவந்த தேவர்களின் எண்ணிக்கை திரேதாயுக இறுதியில் முப்பத்து முக்கோடியை அடைந்திருந்தது.

தம்மைப் படைத்து, தமக்கு இறைவனின் சொத்தாகிய சுவர்க்க இராட்சியத்தை பிறவி பிறவியாக பல பிறவிகளுக்கு தமது ஆஸ்தியாக உரிமையுடன் அனுபவிக்க கொடுத்த தமது ஆன்மீகத் தந்தையாகிய பரமாத்மாவான சிவனை நினைவு செய்ய மறந்துபோயிருந்த தாலும், அவரை விட்டு பல பிறவிகளாக நீண்ட காலத்திற்குப் பிரிந்திருந்ததாலும் தேவர்களின் ஆத்மாக்களின் தூய்மையும் சக்திகளும் ஒவ்வொரு பிறவியிலும் தொடர்ந்து படிப்படியாக குறைந்துகொண்டே வந்தன. தமது தூய்மையையும் சக்திகளையும் இழந்துவந்த தேவர்கள் திரேதாயுக கால முடிவில் துவாபரயுகத்தின் ஆரம்பகாலத்தில் தாம் ஆத்மாக்கள் என்ற தமது ஆத்ம உணர்வை முற்றாக இழந்து தாம் பிறவி எடுத்திருக்கின்ற ஆத்மாவின் ஆடைகளான தமது சரீரங்களையே தாம் என்று கருதுகின்ற சரீரத்தின் உணர்விற்கு வந்துவிடுகின்றனர். இதனால் தமது சரீரத்தின் சமயங்களான வெவ்வேறு இன, மத, குலங்கள் என்ற பல்வேறு பௌதீக அடையாளங்களையே தமது உண்மையான அடையாளங்களாகவும் அறிமுகமாகவும் எண்ணி தம்மை இன்னார் இன்னார் என்று ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தி வந்ததுடன் அவற்றின் அடிப்படையிலேயே ஒருவரோடு ஒருவர் தமது உறவுகளையும், தொடர்புகளையும் ஏற்படுத்திவந்தனர்.

தேவர்கள் தாம் தேவர்கள் என்பதையும், தமது தர்மத்திற்குரிய செயல்களையும் மறந்து சாதாரண மனிதர்கள் போன்று சரீர உணர்விலேயே வாழ்ந்துவந்தனர். இதனால்

*லட்சியம் இருக்கும் இடத்தில் அலட்சியம் இருக்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் நான்! என்கின்ற பலவகையான அகங்காரமும், எனது என்கிற பலவகையான பற்றுக்களும், எனக்கு வேண்டும்! என்ற பலவகையான பேராசைகளும் போன்ற பல தீய குணங்கள் தோன்றியதுடன், கோபம், காமம் என்ற உணர்ச்சிகளின் ஆதிக்கத்திற்கும் ஆட்பட்டு வந்தனர். இதனால் அவர்கள் படிப்படியாக தமது தர்மத்திற்கு மாறான துன்பத்தை விளைவிக்கக் கூடிய பல பாவம் நிறைந்த அதர்மமான செயல்களையும் செய்துவந்தனர்.

தேவர்கள் தமது தூய்மையையும், ஆத்மசக்தியையும் முற்றாக இழந்துபோனதால் அவர்கள் சுவர்க்கத்தை ஆளும் அதிகாரத்தையும், இயற்கையை கட்டுப்படுத்தும் சக்தியையும்கூட துவாபர யுகத்தின் ஆரம்பத்தில் இழந்துவிடுகின்றனர். அவர்கள் தொடர்ந்து மேற்கொண்டுவரும் தூய்மையற்ற செயல்களினாலும், எண்ணங்களினாலும் ஏற்பட்ட எதிர்மறையான அதிர்வலைகளின் தாக்கம் காரணமாக உலகின் தத்துவங்களின் சமநிலையிலும் குழப்பம் ஏற்படுகிறது. இதன் விளைவாக முதன்முதலாக மிகப்பெரிய இயற்கை அழிவு உலகில் ஏற்படுகிறது. அதுவரை சந்தோசத்தை மட்டுமே கொடுத்துவந்த தத்துவங்களும், இயற்கையும்கூட துன்பத்தைக் கொடுக்கத் தொடங்கின.

இதனால் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களினால் தேவர்களின் இராட்சியமும், செல்வங் களும் மறைந்துபோனதுடன், ஒன்றாக இருந்த தேசமும் பல துண்டுகளாக பிரிந்துவிட்டன. தொடர்ந்து ஏற்பட்ட பூகோள மாற்றத்தினால் பிரிந்துசென்று வெவ்வேறு தேசங்களில் வாழ்ந்துவந்த மனிதர்களும் காலப்போக்கில் தமது ஆதியான நிலையை மறந்து வெவ்வேறு பல வேறுபட்ட மொழிகளையும், கலாசாரங்களையும், பண்பாடு, நாகரீகங்களையும் உடையவர்களாக மாறிவிடு கின்றனர். வெவ்வேறு தேசங்களில் வெவ்வேறு சமூகங்களாக பிரிந்து வாழ்ந்துவந்த மனிதர் களிடையே நீண்டகாலமாக சரியான போக்குவரத்துக்களோ, தொடர்புகளோ இருக்கவில்லை. ஆனாலும் சில சமூகத்தினர் தமது தனித்துவமான பண்பாட்டிலும் நாகரீகத்திலும் வளர்ச்சி அடைந்துவந்த அதேவேளை சில சமூகத்தினர் சரியான வழிகாட்டல் இல்லாமையால் தமது மொழி அறிவையும், தமது நாகரீகத்தையும், பண்பாடுகளையும் முற்றாக இழந்து எந்தவித ஆதரவும் அற்றவர்களாக காட்டுவாசிகள் போல் ஆகிவிடுகின்றனர்.

பிற்காலத்தில் ஒவ்வொரு சமூகங்களும் பெரிய இராட்சியங்களாக வளர்ச்சியடைந்து அவர்களுக்கிடையே போக்குவரத்துக்களும், தொடர்புகளும் ஏற்பட்டபோதும் அவர்களிடையே காணப்பட்ட வேறுபாடுகள், முரண்பாடுகள் காரணமாக அவர்களுக்கிடையே சண்டைகளும், யுத்தங்களும்கூட ஏற்படத்தொடங்கின. ஆகவே இயற்கை அழிவுகளாலும், யுத்தங்களாலும் தூய்மையற்ற வாழ்க்கைமுறையாலும் மனிதர்கள் பலவகையான நோய்களுக்கும் அகால மரணத்திற்கும் இழப்புக்களுக்கும் ஆட்பட்டு பல வழிகளில் துன்பத்தை அனுபவித்துவந்தனர். மனிதர்கள் தொடர்ந்து பல வழிகளில் துன்பத்தையும், அழிவுகளையும் சந்தித்துவந்ததால் தம்மை துன்பத்திலிருந்து விடுவித்து மீண்டும் தமக்கு நிலையான அமைதியையும், சந்தோசத் தையும், ஆரோக்கியமான நீண்ட ஆயுளையும், அழியாத செல்வத்தையும் வழங்குமாறு தமது ஆன்மீகத் தந்தையான பரமாத்மா சிவனை பக்தி செய்து வழிபடத்தொடங்கினர். தாம் சந்தோச மாக இருந்த காலத்தில் மறந்திருந்த இறைவனை தமக்குத் துன்பம் ஏற்படும்போதே நினைவு

*அவசரமாகத் தவறு செய்வதைவிட தாமதமாக சரிவரச் செய்வது மேல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யத் தொடங்கினர். ஆகையால் சரீரமற்ற அசரீரியான ஜோதி வடிவான தமது தந்தையான சிவனுக்கு ஆலயங்களைக்கட்டி அதில் லிங்கத்தை பிரதிஸ்டை செய்து ஒழுக்க விதிமுறைகளுடன் வழிபட்டுவந்தனர். ஆகவே முற்காலத்தில் தேவர்களாக வாழ்ந்து வந்த ஆத்மாக்களே பல மறுபிறவிகளின் பின்னர் தமது இராட்சியத்தை இழந்து தமது வாழ்க்கையில் துன்பத்தை அனுபவிக்கும்போது முதன்முதலில் பக்தியையும் இறை வழிபாட்டையும் ஆரம்பித்தவர்கள். ஆரம்பத்தில் அசரீரியான ஒரேயொரு இறைவனை மட்டுமே வழிபட்டுவந்த மனிதர்கள் பிற்காலத்தில் சுவர்க்கத்தில் வாழ்ந்த தமது மூதாதையர்களான தேவர்களையும், அவர்களது உருவங்களை செய்து அவர்களுக்கும் ஆலயங்களை கட்டி தேவர்களுக்குரிய ஒழுக்க முறையுடன் அவர்களையும் வழிபடத் தொடங்கினர். அதேபோன்று உலகில் வெவ்வேறு தேசங்களில் பல மதஸ்தாபகர்களின் வருகையால் பல புதிய மதங்களும் தோன்றிவந்தன.

மனிதர்கள் இறைவனை பிறவி பிறவியாக பல வழிகளில் பக்திசெய்து வழிபட்டுவந்தபோதும், பல புதிய மதங்கள் தோன்றி அவை பெரும் இராட்சியங்களாக வளர்ந்து வந்தபோதும், உலகில் மனிதர்களின் தூய்மையற்ற பாவச் செயல்களும், துன்பங்களும், அழிவுகளும்கூட அதிகரித்தேவந்தன. உலகில் மனிதர்களின் படைப்புகளான பலவகையான தற்காலிக சந்தோசங்கள் அதிகரித்து வந்தபோதும் இறைவனின் படைப்புகளின் உண்மையான, நிலையான தூய்மையும், செழிப்பும், அழகும், அமைதியும், சந்தோசமும் குறைந்துகொண்டே சென்றன.

துவாபரயுகத்தை அடுத்து வந்த கலியுகத்தில் உலகிலுள்ள மனிதர்களிடம் தீய குணங்கள் அதிகரித்து வந்ததால் அவர்களிடம் முரண்பாடுகளும், பிரச்சனைகளும்கூட அதிகரித்தே வந்தன. இதனால் உலகில் இனம், மதம், மொழி, தேசங்களிடையே மேலும் மேலும் பிரிவினைகளும், மோதல்களும் கூடிக்கொண்டே சென்றன. மனிதர்கள் பிறப்பு, இறப்பு, மறுபிறப்பு என்ற பிறவிச்சக்கரத்தில் சிக்கி கர்மத்தின் விதியை அறியாமல் தாம் செய்யும் செயல்களின் விளைவாக பல பிறவிகளாக துன்பத்தையே அதிகமாக அனுபவித்துவருகின்றனர். உலக நாடகச்சக்கரத்தின் இறுதிக் காலப்பகுதியான கலியுகத்தில் உலகம் முழுவதிலும் மாயையின் ஆதிக்கம் காரணமாக எங்கும் அறியாமை என்ற இருள் சூழ்ந்து காணப்படுவதால், மனிதர்கள் அனைவரும் கும்பகர்ணனைப் போன்று அறியாமை என்ற ஆழ்ந்த உறக்கத்தில் உள்ளனர் அதாவது மனிதர்கள், எவருமே உலகவினாசம் பல வழிகளிலும் தம்மை நெருங்கி வருவதையும், அதற்கு முன்னர் தமது பல பழைய முற்பிறவிக் கர்மக் கணக்குகளைத் தீர்த்து, எதிர்காலப் பல புதிய பிறவிகளுக்குத் தேவையான புண்ணியக் கணக்கை உருவாக்கிக் கொண்டு தாம் வீடு திரும்புவதற்கான இறுதிக்காலமே இது என்பதையும் அறியாமல் அனைவரும் மாயையின் தற்காலிக சந்தோசத்தை தருகின்ற கொண்டாட்டங்களிலும், களிப்புகளிலும் மூழ்கியுள்ளனர்.

கீதையில் கூறியதுபோல் கலியுக முடிவில் உலகில் தர்மம் அழிந்து அதர்மம் தளைத்தோங்கி அதன் உச்சக்கட்டத்தை அடையும்போது அதர்மத்தை அழித்து உலகில் மீண்டும் தர்மத்தை நிலைநாட்ட பரமாத்மாவாகிய சிவன் இப்பூவுலகில் ஓர் மனித சரீரத்தில் அவதாரம் எடுக்கின்றார். உலக நாடகம் முடிவிற்கு வருவதால் இந் நாடகத்தின் தயாரிப்பாளரும்,

*ஒரு காரியம் நிறைவேறும்வரை அவற்றைப்பற்றி அறிவாளி வெளியே சொல்லமாட்டான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்குனரும், பிரதான நடிகருமான பரமாத்மா சிவன் தனது பாகத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தனக்கென சொந்தமாக ஒரு சரீரமற்ற அசரீரியான அவர் தனது பாகத்தை நடிப் பதற்காக முதிர்ச்சியும், பக்குவமும் கொண்ட ஒரு மனித சரீரத்தை கடனாக எடுக்கின்றார்.

பரமாத்மா தான் யார் என்ற தன்னைப்பற்றிய முழுமையான அறிமுகத்தையும், தனது படைப்பாகிய முழு உலகின் உண்மையான வரலாற்றையும், புவியியலையும், அதன் ஆரம்பம், மத்தி, இறுதி என்ற முக்காலத்தையும் கொண்ட இறைஞானத்தை அறியாமையில் இருக்கும் மனிதர்களுக்குப் போதிக்கின்றார். நாடகம் முடிவிற்கு வருவதால் நடிகர்களான ஆத்மாக்களுக்கு இது அனைவரும் வீடு திரும்புவதற்கான இறுதிக்காலம் என்பதை நினைவு படுத்தி தந்தையினதும், குழந்தைகளினதும் வீடாகிய ஆத்மலோகத்திற்கு அனைவரையும் தன்னுடன் அழைத்துச் செல்வதற்கு அனைவரையும் தயார்ப்படுத்துகிறார். உலக விநாசத்திற்கு முன்னர் அறியாமை என்ற உறக்கத்திலிருக்கும் அனைவரையும் விழித்தெழச் செய்வதற்கு அனைவர் மீதும் பரமாத்மா சிவன் ஞானம் என்ற மழையை பொழிகின்றார். அவரது ஞானமே தெய்வீகப்புத்தி, ஞானக்கண், மூன்றாவது கண், நெற்றிக்கண் என்றெல்லாம்கூட அழைக்கப் படுகிறது. சுவர்க்கத்தை படைப்பவரான சுவர்க்கக் கடவுளென அழைக்கப்படும் அவரே தனது இறை ஞானத்தின்மூலம் தூய்மையற்ற நற்பண்புகளின்றி வாழும் சாதாரண மனிதர்களை தூய சகல நற்பண்புகளும் நிறைந்த சுவர்க்க இராட்சியத்தை ஆளத் தகுதியான தேவர்களாக மாற்றுகின்றார். இறைவனின் சொத்தாகிய அவர் படைக்கும் சுவர்க்க இராச்சியத்தின் வாரிசுகளாக தாமும் ஆகவேண்டும் என தமது உரிமையைக் கோருபவர்களே இறைவனின் ஆஸ்திக்கு உரிமையுடைய உண்மையான ஆஸ்திகர்கள் என அழைக்கப்படுகிறார்கள்.

பரமாத்மா சிவனே இம் முழு உலகிலுள்ள அனைத்து இன, மத, மனித ஆத்மாக் களுக்கும் இத்துன்ப உலகில் மீண்டும் பிறவி எடுக்காத இறுதி மரணத்தை வழங்குபவர். ஆத்மாக்கள் அனைவருக்கும் தமது சரீரங்களை விட்டு நீங்கி வீடு திரும்புவதற்கான இறுதிக் காலத்தை நிர்ணயிப்பதால் சிவனே மகாகாலன் என்றும் எல்லோருக்கும் இறுதி மரணத்தை மொத்தமாகக் கொண்டு வருவதால் அவரே மரணத்திற்கெல்லாம் மரணமாகிய மகா மரணம் என்றும் அழைக்கப்படுகிறார்.

எனவே பரமாத்மா சிவனை நீண்டகாலமாக பக்தி செய்துவரும் அவரது உண்மையான பக்தர்களான நாமும் இப் பிறவியிலேயே உலக விநாசத்திற்கு முன்னர் நமது பக்தியின் பலனாக இராஜயோகம் என்ற ஞானத்தை கற்று, இறைவனது படைப்பாகிய சதா சந்தோசமும் சகல செல்வச் செழிப்பும் நிறைந்த சுவர்க்கத்தில் நீண்ட ஆயுளுடன்கூடிய பல பிறவிகளை எடுப்பதற்கு தகுதியானவர்களாக ஆகுவோமாக.

---

**நீங்கள் இந்த உலகத்திற்கு என்ன கொண்டுவந்தீர்கள்? எதைக் கொண்டு செல்லப் போகிறீர்கள், வெறுங்கையுடன் வந்துவிட்டு வெறுங்கையுடன் போகப் போகிறீர்கள். போகும்போது எந்த உறவினரோ அன்றி நண்பரோ உங்களைப் பின்தொடர்வோதில்லை. யாரும் எங்கே போகிறாய்? என்றுகூடக் கேட்கமாட்டார்கள். அவரவர் அவரவர் வழியில் போகவேண்டியதுதான். உயிர் இருக்கும்வரைதான் இந்த சம்பந்தங்களும், பற்றுதல்களும், அதனால் யாரையும் வெறுக்காதீர்கள். அனைவரையும் நேசியுங்கள், கெட்டவரையும் அன்போடு அணுகுங்கள். அவனும் நல்லவனாக மாறுவான்.**

***மனிதன் தோல்வியின்மூலமே புத்திசாலி ஆகின்றான்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 64

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 கண்ணுக்குள் என்றுமே நீர்நிறைந்து நிற்பதில்லை
எண்ணத்தில் சோகமெழ அது எழுந்தோடி வருதல்போல்
முன்னுக்கே இறையோனும் முழுநாளும் நிற்பதில்லை
உன்னுக்குள் பக்தியெழ ஊற்றெடுத்து அவன் வருவான்.

02 வேண்டியவர் பின்னொரு நாள் வேண்டாமல் போவதும்
வேண்டாதார் பின்னொருநாள் வேண்டியோராய் மாறுதலும்
இயற்கைதான் என்றெண்ணி இழிநிலைக்குச் சென்றிடாமல்
எல்லோரும் எப்போதும் வேண்டுமென்றே நடந்துய்வீர்.

03 தன்னுறவு பிறருறவு என்றிங்கு தரம்பிரித்து
மண்ணுறவு வைத்திருக்கும் மாந்தரினை விட்டு விட்டு
பிறருறவை தன்னுறவாய் எண்ணுவோர் தம் பேருறவை
இறையுருவாய் எண்ணிநாம் ஏற்றிடுதல் நன்றாம்.

04 பிறருக்காய் வாழ்வதையும் பிறர்மகிழ நடப்பதையும்
பைத்தியம் என்றெண்ணிப் பரிகாசம் செய்பவர்கள்
தன்னலத்தால் இங்கொருவர் தலைவிரித் தாடிடத்தான்
பிறர் நலத்தைப் பேணுவோரைத் தியாகிகள் தான் என்றுரைப்பர்.

05 கன்றுக்குப் பால் கொடுக்கும் கடமையினைப் பசுமாடு
என்றுமே தியாகமென்று எண்ணுவது கிடையாது
கன்றுக்காய் இருந்தபாலை எமக்களித்தல் தியாகம்போல்
எமக்காக இருந்தஒன்றை நாம் பிறர்க்களித்தல் தியாகமாம்.

06 வாழைமரப் பொத்தியது வாழையிலே வரும்போதே
வாழைக் குலைதேடி அதைப்பிரித்துப் பார்க்கலாமோ
ஏழ்மையும் அப்படித்தான் ஏளனங்கள் செய்திடாதீர்
நாளை அவர் வாழ்வும் வாழைபோல மாறிடலாம்.

*முயலும் வெல்லும் ஆமையும் வெல்லும். ஆனால் முயலாமை என்றும் வெல்லாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 உலையின் மேல் நீரதுவும் ஓரளவுதான் கொதிக்கும்
அளவுக்கு மிஞ்சிவிட்டால் அதுபொங்கி வழிதல்போல்
இன்பமோ துன்பமோ அளவோடு அனுபவிப்பீர்
அளவுக்கு மிஞ்சிவிட்டால் ஆவிகூட அடங்கிடலாம்.

08 உலைக்களத்தே தணலொடு இருப்பதுவும் தணலாகும்
இருந்தாலும் இரும்பு ஈற்றில் இரும்பாகவே இருத்தல் போல்
கோபத்தால் கொடியவர் போல் தோற்றத்தில் தோன்றினாலும்
மறுகணமே சாந்தமுற மாறுவோரே மானிடராம்.

09 சந்தையிலே வந்துபல வாடைகள் வீசினாலும்
வந்ததேவை அதுவதனால் சகிப்போடு நடத்தல்போல்
எந்தநிலை வந்தபோதும் சகிப்பினையே கடைப்பிடிப்பீர்
மற்றவரின் தேவைகளும் உம்தேவை போன்றதுவாம்.

10 போதையை ஊட்டும் பானம் பானையில் மாற்றம்செய்தால்
மோதகப் பருப்பினோடு வெல்லமாய் வீழ்வதுண்டு
பானத்தை உண்போர் மட்டும் போதனை செய்தபோதும்
பாதையை மாற்றிடாமல் பள்ளத்தில் வீழலாமோ.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*வாழ நினைப்பவனுக்கு வானம்கூட வாயிற்படிதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்பாற்ற வேணும் தாயே

**– *திருமதி தில்லை சிதம்பரவேணி (வள்ளி)* அவர்கள் –**

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள் என்னுள்ளத்தினுள்ளே
இருப்பள் இங்கு வராது இடர்.

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரைப் போல் கையும் துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமும் துதித்தால்
கல்லும் சொல்லாதோ கவி.

முப்பெருந் தேவிகளான துர்க்காதேவி, லட்சுமிதேவி, சரஸ்வதிதேவி ஆகிய மூவரையும் ஏற்றியும் போற்றியும் வழிபாடாற்றுகின்ற சக்தி விரதமாக நவராத்திரி விரதம் திகழ்கிறது.

புரட்டாதி மாதத்திலே அமாவாசை கழிந்து பிரதமை தொடக்கம் தசமி ஈறாக உள்ள நாட்கள் நவராத்திரி விரதம் வரமாகிறது.

முதல் மூன்று நாட்களும் வீரத்திற்கு அதிபதியான துர்க்கா தேவிக்கும், அடுத்த மூன்று நாட்களும் செல்வத்துக்கு அதிபதியான இலட்சுமி தேவிக்கும், அடுத்த மூன்று நாட்களும் கல்விக்கு அதிபதியான சரஸ்வதி தேவிக்கும் வழிபாடு செய்யப்படுகிறது. ஒன்பது நாட்களும் நிறைவடைந்து பத்தாம் நாள் தசமியன்று விஜயதசமியாக வெற்றிக்கு வழி சமைக்கப் பட்டுள்ளது.

ஆயுதபூஜையாக ஒன்பதாம் நாள் இரவன்று, ஏடுகள், புத்தகங்கள், இசைக்கருவிகள், பஞ்ச கர்மாக்களின் தொழில் உபகரணங்கள், கமத்தொழில் உபகரணங்கள், யுத்தகால உபகரணங்கள் மற்றும் இல்லற மான்மிய அட்சய பாத்திரங்கள் யாவற்றையும் கொலுவுக்கு முன்பாக அடுக்கி வைத்து பூஜை ஆற்றிப் புதுப்பொலிவும், புத்துணர்ச்சியும் பெற சகலகலாவல்லி பாமாலை இசைத்துப் பாடுவார்கள். அடுத்தநாள் நிறைவாக மானம்பூ வாழைவெட்டு இடம்பெறும்.

மாதா பராசக்தி வையமெலாம் நீ நிறைந்தாய்
ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே
ஏதாயினும் வழிநீ சொல்லுவாய் எமதுயிரே
வேதாவின் தாயே மிகப்பணிந்து வாழ்வோமே.

விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் விளம்பில் உம்போல் கண்கண்ட தெய்வம் உளதோ? அம்பாளே சரணம் அம்மா! தாயாகி எம்மைக் காத்தருளும்!

ஆலயங்கள், பாடசாலைகள், வீடுகள் நிறுவனங்கள், தொழிற்சாலைகள், ஊடக மாடங்கள் யாவற்றிலும் நவராத்திரி விழாவை முன்னெடுப்பர்.

*தூய்மையே எல்லா நல்லெண்ணங்களுக்கும் அடிப்படை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நாளும் முப்பெருந்தேவியரை அலங்கரித்து அவல், கடலை, பொங்கல், வடை, மோதகம், பாயாசம், பஞ்சாமிர்தம், கரும்பு, கற்கண்டு என இனிக்கும் பலகாரம் படைத்து வீரம், செல்வம், கல்வி, தானியம், சம்பாத்தியம், ஆரோக்கியம், சந்தானம், சௌபாக் கியம், சாகித்தியம் யாவற்றையும் பெற்றுக்கொள்ளலாம்.

கலையாத கல்வியும், குறையாத வயதும், கபடுவாராத நட்பும், கன்றாத வளமையும், குன்றாத இளமையும், கழுபிணி இல்லாத உடலும், சலியாத மனமும், அன்பகலாத மனைவியும், தவறாத சந்தானமும், தாளாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும், தடைகள் வாராத கொடையும், தொலையாத நிதியமும், கோணாத கோலும், துன்பம் இல்லாத வாழ்வும் தொண்டர்குழாமும் ஆகிய பதினாறு பேறுகளும் நவராத்திரியில் சகலருக்கும் கிடைப்பதாக.

நெஞ்சிலே வஞ்சம் இல்லாத இனம் நம்நாட்டில் இந்த நல்ல நாளில் பெருகுவதாக.

---

## முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி

“முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி” இதிலிருந்து நீங்கள் அறிவது என்ன? வகுப்பறையில் ஆசிரியர் கேட்டார். முல்லை என்பது ஒரு கொடிவகை தாவரம். அது பற்றிப்படர ஏதேனும் ஒரு பற்றுப்பொருள் கண்டிப்பாக தேவை என்பது புரிகிறது என்றான் ஒரு மாணவன்.

ஒரு தாவரம் பற்றிப்படர இடமின்றித் தவித்தால்கூட அதனைக் கண்டு மனம் துடித்த அரசனொருவன் தமிழகத்தில் வாழ்ந்திருக்கிறான். நெகிழ்ச்சியாக இருக்கிறது என்றான் இன்னொரு மாணவன்.

இதென்ன பைத்தியக்காரத்தனம். ஒரு முல்லைக்கொடி படர ஏதுமின்றி தவித்தால் அதற்கு ஒரு குச்சியை அல்லது கோலை ஊன்றுகோலாய் கொடுக்கலாம். அதனை விடுத்து அவ்வளவு பெரிய தேரை யாராவது கொடுப்பார்களா? முட்டாள் அரசர்களும் அந்நாளில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பது இதிலிருந்து புரிகிறது. சொல்லிவிட்டு நக்கலாய் சிரித்தான் வேறொரு மாணவன்.

தான் பயணித்த தேரை ஒரு முல்லைக்கொடிக்காக விட்டுவிட்டு தான் நடந்து செல்லத் துணிந்த அரசன்தான் எவ்வளவு பெரிய வள்ளல் என்றாள் ஒரு மாணவி.

முதலில் தேர் செய்ததே மரத்தில்தான் மரத்தை வெட்டி தேர்செய்துவிட்டு கொடியை காப்பது அறிவுடைமையா? தேர் செய்ய மரம் வெட்டுவதை நிறுத்த வேண்டும் என சொல்லியிருக்க வேண்டும் அந்த அரசன் என்பது இன்னொரு மாணவியின் பதில்.

செயல் ஒன்றுதான். எத்தனை எத்தனை பார்வை, எத்தனை எத்தனை கண்ணோட்டம், ஒரு விஷயத்தில் எல்லோருக்கும் ஒரே கண்ணோட்டம் இருக்க எப்போதும் சாத்தியமில்லை. அவரவர் பார்வை... அவரவர் கண்ணோட்டம்.

இப்படித்தான் நமது செயல்களைப் பற்றி நாம் நன்மையே செய்தாலும் ஆயிரம் விமர்சனங்கள் வரலாம். அதனாலெல்லாம் மனம் சோர்ந்துவிடாமல் மற்றவர்க்கு தீங்கு இல்லையெனில் நமக்கு சரியென்று தோன்றுவதை தொடர்ந்து செய்துகொண்டே இருப்பது சிறப்பு.

*கீழ்ப்படிதலை அறிபவனே கட்டளை இடுவதை அறிவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் தவமொழி

(தொடர்ச்சி...

– திரு ஆ.தா.இ. ஜெயபாலன் அவர்கள் –

இறைவனுடைய அனுக்கிரக பேரின்பத்தை அனுபவிப்பதற்கு ஒரே வழி தெய்வ சிந்தனையிலே இதயம் தோய்ந்து இரண்டற்ற பாவனையில் மூழ்குவதேயாகும். இதைப் பாடுகிறார் திருமூலர்.

நான் என்றும் தான் என்றும் நாடினேன்,

நான் வேறு இறைவன் வேறு என்று என்னிலிருந்து அவன் வேறுபட்டு நிற்கிறான் என்பதாக நினைத்து அவனைத் தேடத்தொடங்கினேன்.

நானென்றும் தானென்றும் நாடினேன், நாடலும்
நான் என்று, தான் என்று இரண்டு இல்லை என்பது

அப்படி நான் இறைவனைத் தேடத்தொடங்கியும் நான் என்றும் இறைவன் என்றும் தனித்தனியா இரண்டு பொருள் இல்லை என்ற உண்மையை,

நான் என்ற ஞான முதல்வனே நல்கினான்

(ஞானமுதல்வன்- ஞான மயமாகிய இறைவன் நான் என்ற ஞான முதல்வனே- என்னுள் நானாகத் தோற்றம் காட்டி நிற்கின்ற ஞான முதல்வனாகிய இறைவனே நல்கினான்- உணர்த்தினான்)

இந்த உணர்வு ஏற்பட்டதும் என்ன நேர்ந்தது?

நான் என்று நானும் நினைப்பு ஒழிந்தேனே.

(நானும் நான் என்று நினைப்பதை விட்டொழித்தேன் என்று பொருள். நானென்ற நினைப்பொழிந்தேனே- நான் என்று என்னைத் தனியாக பிரித்துக்கொண்டு நினைக்கிற ஆணவ நினைப்பை விட்டு நீக்கினேன் நீங்கி என் தனித் தோற்றம் ஒழிந்து எல்லாம் அவரே என்பதை உணர்ந்தேன்.)

நான் என்றும், தான் என்றும் நாடினேன், நாடலும்
நான் என்று, தான் என்று இரண்டு இல்லை என்பது
நான் என்ற ஞான முதல்வனே நல்கினான்,
நான் என்று நானும் நினைப்பு ஒழிந்தேனே.

இறைவன் ஆன்மாக்களிலேயே கலந்து உணர்விலே சுடர்விடுகிறான் என்பதை கூறி குருவின் உபதேசமின்றி இந்த மெய்யுணர்வு அடைவது முடியாது என்று பாடுகிறார்.

உருவின்றியே நின்றுருவம் புணர்க்கும்

(உருவின்றியே நின்று- பரம்பொருளானது தனக்கென்று ஓர் உருவமில்லாமல் நின்று உருவம் புணர்க்கும்- உயிர்களுக்கு பல உடல்களைத் தரும்)

*அரிய காரியங்களைச் செய்ய பெரிய உழைப்பு வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவின்றியே நின்று தான்கரு வாகும்

(கரு- பிறப்புக்கு வித்து கருவன்றியே நின்று மூலகாரணமாகிய தனக்கு ஒருவித விந்தும் இன்றியே சுயம்புவகை நின்று, தான் கருவாகும்- உலகிலுள்ள உயிர்களின் தோற்றங்களுக்கெல்லாம் அவன் கருவாகிறான்)

அருவின்றியே நின்ற மாயப் பிரானைக்

(மரு- பிணைப்பு மருவன்றியே- ஒன்றோடும் பிணைப்பு இல்லாமல் நின்ற மாயப் பிரானை- நின்று இயங்குகின்ற மாயனான எம்பெருமானை மாயன்- லீலைகளைக் காட்டி மயக்குபவன்)

குருவின்றி யாவர்க்கும் கூடவொண் ணாதே

அப்படிப்பட்ட இறைவனை ஆசாரியனுடைய அருளில்லாமல் அடையமுடியாது.

உருவின்றியே நின்றுருவம் புணர்க்கும்
கருவின்றியே நின்று தான்கரு வாகும்
அருவின்றியே நின்ற மாயப் பிரானைக்
குருவின்றி யாவர்க்கும் கூடவொண் ணாதே.

ஞானம் பெறுவதற்கு ஒரு குருவின் உபதேசம் அவசியமானது.

தவம் செய்து ஞானம் பெற்ற பெரியோர்கள் தங்களுடைய பண்புகளில் எவ்வித மாற்றமும் உண்டாகாமல் நிற்பார்கள். அதுபோலவே பிறருடைய புகழ்ச்சி உபசாரங்களில் மயங்கி நிலைகெட மாட்டார்கள். இதைப் பாடுகிறார் திருமூலர்.

செற்றில் என்? சீவில் என்? செஞ்சாந்து அணியல் என்?

(செற்றில் என்- பிறர் தங்களைத் தாக்கினால் என்ன, சீவில் என்- தங்கள் உடம்பை அறுத்து சீவினாலும் என்ன? செஞ்சாந்து அணியில் என்- செஞ்சாந்- செஞ்சாந்தாகிய சந்தனக்கலவை கொண்டுவந்து தங்கள் மேனியிலே பூசி உபசரித்தாலும் என்ன?

துன்புறுத்தினாலும் அல்லது உபசாரங்கள் செய்தாலும் தங்கள் நிலையிலிருந்து மாறமாட்டார்கள். இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் துன்பத்தையும் உபசாரத்தையும் சமமாக கருதுவார்கள். தங்கள் தவத்தின் பெருமையை அறியாத மூர்க்கர்களால் தங்களுக்கு எத்தகைய துன்பம் வந்தாலும் கலங்கமாட்டார்கள் என்பதை மேலும் கூறுகிறார்.

மத்தகத்தே உளிநாட்டி மறிக்கில் என்?

(மத்தகம்- தலையுச்சி மத்தகத்தே- தலை உச்சியில் உளிநாட்டி- உருளை செருகி மறிக்கில் என் திருகினாலும் என்ன? இதெல்லாம் ஒரு பொருட்டு இல்லை பூரண ஞானம் அடைந்தவர்களுக்கு)

வித்தகன் நந்தி விதிவழி அல்லது
தத்துவ ஞானிகள் தன்மைகுன் றாரே.

(வித்தகம்- ஞானம். வித்தகள்- நந்தி ஞான குருவாகிய நந்தி பெருமானுடைய விதி வழியல்லது- விதித்த பாதையில் செல்வதற்கல்லாமல் தன்மை குன்றாரே- தங்கள் பண்புகளிலிருந்து குறையமாட்டார்கள்)

*நேரத்தைத் தாமதப்படுத்தினால் தீமையான முடிவையே தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவருடைய கருத்து என்னவெனில், ஞான குருவின் உபதேச வழியிலே செல்கின்ற சான்றோர்கள், இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் கண்டு நிலைகுலையமாட்டார்கள். தங்கள் வழியிலே தொடர்ந்து தொடர்ந்து செல்வார்கள்.

செற்றிலென் சீவில் என்? செஞ்சாந்து அணியில் என்
மத்தகத்தே உளி நாட்டி மறிக்கில் என்?
வித்தகன் நந்தி விதிவழி அல்லது
தத்துவ ஞானிகள் தன்மைகுன் றாரே.

தவம் செய்து திடம் பெற்ற ஞானிகள், மதபேதங்களைக் கொண்டு அடிபணியமாட்டார்கள். அரசர்கள் நிகழ்த்தும் கொடுமைகளுக்கிணங்கி அவர்களுக்கு அடிபணியமாட்டார்கள்.

தத்துவ ஞானிகளின் ஞான வைராக்கியத்தை மேலும் விளக்குகிறார் தவமுனி

வான் நின்று இடிக்கில் என்? மாகடல் பொங்கில் என்?

(வானின்று- வானத்திலிருந்து இடிக்கிலென். இடி இடித்தாலென்ன, மாகடல் பொங்கிலென்- பெரிய சமுத்திரம் பொங்கி வந்தாலுமே என்ன)

கான்நின்ற செந்தீக் கலந்துடன் லேகில் என்?

(கானின்ற செந்தீ- காட்டுத்தீயானது கலந்துடன் வேகிலென்- நாட்டில் பரவி எல்லாம் வெந்து விட்டாலும் என்ன)

தான் ஒன்றி மாருதம் சண்டம் அடிக்கில் என்?

(தானொன்றி மாருதம்- ஒரேயடியாகச் சூழ்ந்து வீசும் காற்றானது சண்டம் அடிக்கிலென்- வலிமையோடு புயலாக அடித்தாலும் என்ன)

நான் ஒன்றி நாதனை நாடுவன் நானே.

(நான் ஒன்றி- நான் என்ற தன்மை இறைவனோடு ஒன்றிய நிலையிலே நாதனை நாடு வேன் நானே- தலைவனாகிய இறைவனை நான் நாடுவேன்)

இயற்கையில் உள்ள பாதங்களைப்போல் பெரிய இடர்கள் ஏற்பட்டாலும், நான் இறைவனை ஒரே நிலையில் மாறாமல் நாடுவேன். இது உறுதி என்று தமது நெஞ்சின் உறுதியை எடுத்துக்கூறி உபதேசம் செய்கிறார் தவயோகி.

வான் நின்று இடிக்கில் என்? மாகடல் பொங்கில் என்?
கான் நின்ற செந்தீக் கலந்துடன் வேகில் என்?
தான் ஒன்றி மாருதம் சண்டம் அடிக்கில் என்?
நான் ஒன்றி நாதனை நாடுவேன் நானே.

இந்த உறுதியை மேலும் பாடுகிறார் தவயோகி.

ஆனை துரக்கிலென் அம்பூ டறுக்கிலென்

(ஆனை தூக்கிலென்- மதம் கொண்ட யானை என்னை துரத்தினால் என்ன அம்பு ஊடு அறுக்கிலென்- அம்பு உடம்பில் ஊடாகப் பாய்ந்து வேதனை செய்தாலென்ன)

கானத் துழுவை கலந்து வளைக்கிலென்

(கானகத்து உழவை- காட்டிலேயுள்ள புலி உழுவை- புலி கலந்து வளைக்கிலென்- பாய்ந்து வளைத்தாலும் என்ன)

*ஊக்கமுள்ள மனிதன் தம் கடமையைச் செய்யத் தவறமாட்டான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைப் பதியினி லெம்பெரு மான்வைத்த
ஞானத் துழவினை நானுழு வேனே.

(ஏனைப்பதி- கேவல நிலை அதாவது புறப்பொருள்களினின்றும் தனிப்பட்ட ஞானமாகிய வயல், ஏனைப்பதியில்- ஞானவயலிலே எம்பெருமான் வைத்த- இறைவன் எனக்கென்று வைத்துக் கொடுத்த ஞானத்து உழவை- ஞான உழுவாகிய வழிபாட்டு விவசாயத்தை நான் உழுவேனே- நான் மாறாமல் பிசகாமல் உழுது கொண்டிருப்பேன்.)

உள்ளமாகிய வயலில் ஞானமாகிய உழவு நடக்கிறது. அந்த உழவைச் செய்யும்போது யானை துரத்தினாலும் சரி, அம்பு உடலிலே வந்து பாய்ந்தாலும் சரி, புலி வளைத்துக் கொண்டாலும் சரி இந்த உழவுக்கு ஊறு ஏற்படாமல் வைராக்கியத்தோடு இதைச் செய்கிறேன் என்கிறார் தவயோகி. அதாவது அந்தச் சோதனைகள் ஆசாபாசங்கள் எப்படி வந்து மனத்தை இழுத்தாலும் அவற்றில் சிக்கிக்கொள்ளாமல் இந்த உழவு நடைபெற வேண்டும் என்பதை நமக்கு சொல்லிக் கொள்வார்போல இதை நமக்கும் உபதேசம் செய்கிறார் தவயோகி.

ஆனை துரக்கிலென் அம்பூ டறுக்கிலென்
கானத் துழுவை கலந்து வளைக்கிலென்
ஏனைப் பதியினி லெம்பெரு மான்வைத்த
ஞானத் துழவினை நானுழு வேனே.

இந்தப் பாடல்களில் சொல்லியிருப்பதை கீதை இரண்டாம் அத்தியாயம் 55, 56, 57 சுலோகங்களிலும் காணலாம். (தொடரும்...

## வாசகர் உள்ளத்திலிருந்து...

மாதம் தவறாமல் எங்கள் வீடு தேடிவந்து எங்களுக்கு அருள் பாலிக்கிறார் செல்வச்சந்நிதி வேற்பெருமான். ஆமாம் ஞானச்சுடர் மலர் வடிவிலே. இம்மலரில் காணப்படும் ஆன்மீக கவிதைகளோ மற்றும் கட்டுரைகளோ பாமர மக்களும் விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் அமைந்திருப்பதும் ஓர் சிறப்பம்சமாகும். அத்துடன் வயதில் பெரியவர்களுக்குத்தான் இம்மலர் ஏற்றது என்ற நிலைமை மாறி இன்றைய பள்ளி மாணவர்களும் பெருமளவு பயன்பெறக்கூடிய அரிய கட்டுரைகள் வெளிவருவதும் வாசகர்களாகிய நாம் பாராட்ட வேண்டிய விடயமாகும்.

புண்ணியம் தேடி எங்கெங்கோ அலையாமல் வீட்டில் இருந்தவாறே பிரார்த்தனை மூலம் புண்ணியத்தைத் தேடுங்கள் என்ற உண்மையான அறிவுபூர்வமான விளக்கத்தையும் இம்மலரிலேயே காண்கிறோம்.

மேலும், வெளியூர் ஆலயங்களுக்குச் செல்ல வாய்ப்பில்லாத மக்களுக்கு எல்லாம் இம்மலரில் வெளிவரும் யாத்திரைக் கட்டுரைகளைப் படிக்கும்போது உண்மையில் (கதிர்காம யாத்திரை, வட இந்திய யாத்திரை போன்றவற்றை) அந்தந்த ஆலயங்களுக்குச் சென்று தரிசித்த உணர்வுகளும் மனத் திருப்தியும் கிடைக்கின்றது எனும்போது இம்மலரின் மகத்துவத்தையும் ஆற்றங்கரையானின் அற்புத அருளாடல்களையும் போற்றிப்புகழ வார்த்தைகளே இல்லை.

நிறைவாக இம்மலரின் செயற்பாடுகள் அனைத்துக்கும் இன்னும் ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்படும் நித்திய அன்னதானப்பணி, சமய, சமுதாயப் பணிகள் போன்ற இன்னோரன்ன பணிகளையும் முன்னின்று ஆற்றுப்படுத்திக்கொண்டிருக்கும் ஆச்சிரம சுவாமி திரு மோகனதாஸ் ஐயா அவர்களுக்கும், பேரவையினருக்கும் நன்றி கூறுவதோடு அவர்களுக்கு சந்நிதி வேற்பெருமானின் திருவருட்கடாட்சம் மென்மேலும் கிடைக்கவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

*மருதனார்மடம்.* *திருமதி தயாநிதி பாலசுந்தரம்.*

*குறிக்கோளை அடைய விடாமுயற்சிதான் முக்கியம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தனுக்காகப் பசியாறிய பிள்ளையார்

## அல்லது

# திருமுறை காட்டிய பிள்ளையார்

**– திரு வி. செல்வரத்தினம்** அவர்கள் –

சோழநாட்டில் சிதம்பரத்தை அடுத்துள்ள திருநாரையூரென்னுந் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் பொல்லாப்பிள்ளையாருக்குப் பூசை செய்யும் ஆதி சைவரொருவருக்குச் சைவசமயம் வாழும் பொருட்டு ஓர் சற்புத்திரர் அவதரித்தார். புத்திரனுக்குப் பெற்றோர்கள் நம்பியாண்டார் நம்பி என நாமம் சூட்டினார்கள். அப்பொழுது சோழநாட்டை மிகச் சிறப்பாக இராஜராஜ சோழன் ஆண்டு வந்த பொற்காலம் சத்தியம் பேசிய தெய்வீக காலகட்டம். நம்பியின் தந்தை தினமும் தவறாமல் பிள்ளையாருக்குப் பூஜை செய்துவிட்டு, பிரசாதத்தை நம்பியிடம் கொடுத்து "நம்பி பிள்ளையார் சாப்பிட்டது போக மிச்சமான இந்தப் பிரசாதத்தை நீ உண். நீ நன்றாகப் படித்து பெரும் அறிவாளியாக வருவாய்" என்று கூறிக்கொடுப்பார். நம்பி வேதங்கள் பயின்று வரும் காலத்தில் ஒரு நாள், நம்பி, தான் மூன்று நாட்களுக்கு வேலை நிமித்தமாக வெளியூர் போக வேண்டியிருக்கிறது. ஆகவே இந்த மூன்று நாட்களும் எனக்குப் பதிலாக ஆலயத்துக்குப் போய் பொல்லாப் பிள்ளையாருக்கு ஒழுங்காக நித்தியகால பூஜையைச் செய்துவிட்டு வா என்று சொன்னார். அதற்கு ஆகட்டும் அப்பா. அப்படியே நான் செய்கிறேன். நீங்கள் போய் வாருங்கள் என்றார் நம்பி.

பின் நம்பி வேண்டிய நிவேதனத்துடன் ஆலயத்துக்குப் போய் பிள்ளையாரப்பா நான் உனக்கு அபிஷேகம் செய்ய நேரமாகிவிட்டதா என்று சொல்லி பசிக்கிறதா அபிஷேகம் செய்து, இதோ உங்களுக்குப் பிரியமான அப்பம், கொழுக்கட்டை, அவல் பாயாசம், பழங்கள் எல்லாம் இருக்கின்றன சாப்பிடுங்கோ என்றான். பின் சற்று நேரம் காத்திருந்தான். பிள்ளையார் சாப்பிடாமல் பிரசாதம் அப்படியே இருந்தன. நம்பிக்குச் சரியான கவலை வந்தது. பிள்ளையாரே நான் என்ன தவறு செய்தேன. நான் செய்த பூஜையில் தவறா நான் படைத்த உணவு நன்றாக இல்லையா ஏன் பேசாமல் இருக்கிறீர்கள். நீங்கள் சாப்பிடாவிட்டால் இதோ என் தலையை இந்தக் கல்லில் மோதி உயிரைத் துறப்பேன் இது சத்தியம் என்று சொல்லி "ஓ"வென்று அழுதான் நம்பி. பிள்ளையார் அமர்ந்திருந்த மேடைமீது தலையை மோதிக்கொண்டு கதறினான்.

உடனே பிள்ளையார் அவன் முன்தோன்றி, "நம்பி, குழந்தாய் உன் செயலை நிறுத்து, நீ கவலைப்பட வேண்டாம். நான் முழுவதும் சாப்பிடுகிறேன் என்றார்.

இப்போதுதான் எனக்கு பெரும் மகிழ்ச்சி பிள்ளையாரே. நீங்கள் சாப்பிடுங்கள். பிள்ளையார் நிவேதனம் முழுவதும் தனது தும்பிக்கையால் எடுத்துச் சாப்பிட்டார். இதனை நம்பி பார்த்துக்கொண்டேயிருந்தார். அவருக்கு நேரம் போனதே தெரியவில்லை. நம்பி வேதம்

*வாழ்வில் அன்பாகவும் தாழ்வில் தக்க துணையாகவும் விளங்குவது கல்வி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கும் பாடசாலைக்குப் போகமுடியாது என்பதை அறிந்து மிக வேதனை அடைந்தான். அப்படிப் போனாலும் ஆசிரியர் தண்டனை கொடுப்பார். என்ன செய்வது என்று தெரியாமல் திண்டாடினார். உடனே பிள்ளையார் ஏ தம்பி கவலைப்படாதே. உனக்கு வேதம் மட்டுமல்ல சகல கலைகளையும் நானே கற்றுக்கொடுக்கிறேன் என்றார்.

இதனை அறிந்த சிவனடியார்கள் அரசனிடம் சென்று, நாங்கள் தங்கள் அவைக்கு வந்து பாடுவதால் மெய்மறந்து போகிறீர்கள். ஆனால் எங்களுக்கு சில தேவாரங்கள் மட்டும்தான் தெரியும். ஆனால் அரசே நாயன்மாரால் பாடப்பட்ட பல்லாயிரக்கணக்கான தேவாரங்கள் இருக்கின்றன. மற்றைய தேவாரங்களையும் எமக்கு பெற்று தந்தால் நல்லது என்றார்கள் அடியார்கள்.

கவலைப்பட வேண்டாம் அடியார்களே. திருநாரையூரில் பிள்ளையாரோடு பேசும் வல்லமை பொருந்திய ஓர் சிறுவன் இருக்கிறான் அவனிடம் போய் இந்த திருமுறைகள் எங்கே இருக்கின்றன என்று பொல்லாப்பிள்ளையாரிடம் கேட்டுக் கூறும்படி கேட்போம் என்று சொன்னார்.

பின் அரசன் நம்பி அவர்களிடம் போய் விநாயக பக்தனே, நீர் எங்களுக்கு ஓர் உதவி செய்யவேண்டும். அதாவது சைவசமயக் குரவர்கள் மூவரும் இயற்றிப் பாடிய (திருமுறைகள்) தேவாரங்கள் எங்கே என்று தெரியவில்லை. சிவனடியார்கள் மிகக் கவலைப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே தாங்கள் பிள்ளையாரிடம் கேட்டு அவை எங்கே இருக்கின்றன என்பதனை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள் என்று மிகப் பணிவாகக் கேட்டார்கள்.

உடனே நம்பி பிள்ளையாரிடம் சென்று, பிள்ளையாரே தேவாரத் திருமுறைகள் இருக்குமிடம் தெரியாமல் இவர்கள் கலங்கிக்கொண்டு இருக்கிறார்கள் இவர்கள் எப்படியும் இந்தத் தேவார திருமுறைகளைப் பெறவேண்டும் ஆகவே அதனை எமக்குக் காட்டியருள வேண்டும் என்று வேண்டினார்கள்.

அதற்குப் பிள்ளையார், குழந்தாய் இசையோடு பொருந்திய மூவர் தேவாரத் திருமுறை ஏட்டுச் சுவடிகள் சிதம்பரத்திலுள்ள நடராஜர் நடனம் புரிகின்ற பொற்சபையின் அருகில் உள்ள ஓர் அறையில் பூட்டி பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கின்றன என்று கூறினார். நம்பி அவர்களுக்கு பெரும் சந்தோசம். அவர் அரசனிடம் சொன்னார் பொல்லாப் பிள்ளையார் பொய் சொல்ல மாட்டார் நாங்கள் சிதம்பரத்துக்குப் போய்ப் பார்ப்போம் என்றார்.

தெய்வத்தின் அருளைப் பெற்றிருக்கும் நம்பியுடன் அரசன் சிதம்பரம் சென்று திருநாரையூர் பொல்லாப்பிள்ளையார் சொல்லிய தகவலின்படி, சிதம்பரத்து தீட்சதர்களிடம் போய் குறித்த, அறையைக் காட்டி இந்த அறைக்குள் தேவார திருமுறைகள் இருக்கின்றன. அவற்றை எடுத்துத் தரும்படி கேட்டார். அதற்கு தீட்சதர்கள் சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் நேரில் வந்தால்தான் அந்த அறையைத் திறக்க முடியும், அல்லது முடியாது என்றார். அதற்கு நம்பி இது என்ன செய்யமுடியாத காரியத்தை சொல்லுகிறீர்கள். அவர்கள் எப்படி இவ்விடம் வரமுடியும் என்றார். அரசன் தீட்சதர்களை ஒரு வழிக்குக் கொண்டுவர வேண்டும். அதற்காக அவர் ஆழ்ந்த சிந்தனை செய்து, ஒரு முடிவுக்கு வந்தார். தீட்சதர்களே

*துணிச்சலோடு உழைப்பவனுக்குத்தான் வெற்றி அருகில் வந்து அமரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராசப் பெருமானுக்கு நாளை சிறப்பாக அபிஷேகம், ஆராதனைகள், வீதியுலா சிறப்பாக நடைபெறவேண்டும். அதற்கு வேண்டிய ஒழுங்குகளை செய்யவும் என்றார். தீட்சதர்கள் அரசனின் வேண்டுகோளின்படி சிறப்பாக ஒழுங்கு செய்து நடராஜர், சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியவர்கள் திருவீதி உலா வந்தார்கள். வரும்போது திருமுறைகள் வைக்கப்பட்டிருந்த அறையின் முன்பாக சமயகுரவர் மூவரும் நிறுத்தப்பட்டார்கள். அரசன் சொன்னார், தீட்சதர்களே தேவாரம் பாடிய மூவரும் இதோ இப்போது இங்கே நேரில் வந்து இருக்கிறார்கள். உடனே அறையின் கதவைத் திறந்தார்கள். அங்கே தேவார ஏடுகள் யாவும் கறையான் பிடித்து இருந்தன. உடனே அவர் கள் குடம், குடமாக நல்லெண்ணையை புற்றின்மீது ஊற்றி சிலவற்றை எடுத்தார்கள். பல ஏடுகள் மண்ணோடு மண்ணாகி விட்டதை மன்னன் பார்த்தான், வருந்தினான், கலங்கினான். செய்வதறியாது திகைத்தான். அப்போது "மூவர் பாடல்களிலே ஆண்டு வேண்டுதல் வைத்தோம் என்றொரு அசரீரி எழுந்தது. அதுகேட்ட பின்பே மன்னன் உள்ளம் ஆறுதல் அடைந்தது. மன்னன் கேட்கும்படி இனி உம்மை திருமறை கண்ட சோழன் என்று மக்கள் போற்றுவார்கள் என்று ஓர் அசரீரியும் கேட்டது.

அதன் பின்னர் அவ்வேடுகளை எடுத்து முறை செய்யுமாறு மன்னர் நம்பியாண்டார் நம்பிகளைக் கேட்டுக்கொண்டார். அவரும் அவ்வாறே செய்தார். அதாவது திருஞான சம்பந்தர் பாடியனவாகக் கிடைத்த முந்நூற்றெண்பத்து நான்கு பதிகங்கள் (384) ஆனால் உண்மையாகப் பாடிய திருப்பதிகங்கள் 16000 ஆகும். இவை முதல் மூன்று திருமுறைகளாக வகுத்தார். திருநாவுக்கரசரின் முன்னூற்றெழுபத்து மூன்று பதிகங்களையும் (373) ஆனால் உண்மையாகப் பாடிய பதிகங்கள் 49000 ஆகும். இதனை நான்கு ஐந்து ஆறாம் திருமுறைகளாக வகுத்தார். சுந்தரரின் நூறு பதிகங்கள் (100) ஆனால் உண்மையாகப் பாடிய திருப்பதிகங்கள் 38000 ஆகும். இவற்றை ஏழாம் திருமுறையாக வகுத்தார். கிடைப்பதற்குரிய இத் தேவாரங்கள் பொல்லாப்பிள்ளையாரால் காட்டிக்கொடுக்கப்பட்ட நம்பி அவர்களும் அபய குலசேகரன் மன்னன் (திருமறை கண்ட சோழர்) அவர்களால் எமக்குக் கிடைக்கப்பெற்றன.

**வடிவேலே எமைவந்து ஏற்றிடாயோ**

எல்லாம் நீயென்று நான் இருந்தேன் முருகா
என்னை என்னுள் வாடடவே ஏன் வைத்தாய்
தள்ளாமை கொண்டு உயரும் வய தெமக்கு
தடுமாற எமை விட்டு ஏன் சிரித்தாய்
இல்லாமை இருந்த முன்னைய நாளில் கூட
இனிதாக நான் மகிழ்ந்த நிலையும் போச்சு
பொல்லாமை கூறுகின்ற உலக மிதில்
புதுவிதமாய் கதை பேசிக் கொள்வார் நாவில்
வல்லாண்மை உரை பகருகின்ற நிலையும் இல்லை
வடிவழகா எமையும் வந்து ஏற்றிடாயோ.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*வாய்ப்பே ஒரு மனிதனை உயர்வடைய வைக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 50000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| திரு ஜெயசுந்தரம் குடும்பம் காங்கேசந்துறை | | 25k பருப்பு, 1மூடை அரிசி, 10000. 00 |
| க. வைரவநாதன் | இயற்றாலை | மரக்கறி, அரிசி, 500. 00 |
| K. செந்தூரன் | கொழும்பு | 1000. 00 |
| க. கணபதிப்பிள்ளை | மிருசுவில் | 5000. 00 |
| ம. ரவீந்திரன் | அரியாலை | 5000. 00 |
| சி. கங்காதரன் | பண்டத்தரிப்பு | 10000. 00 |
| கி. நாகரசா | அச்சுவேலி | 1மூடை அரிசி |
| சி. கண்மணி | மயிலிட்டி | 2000. 00 |
| சற்குணேஸ்வரி குடும்பம் | கொழும்பு | 3000. 00 |
| அ. ஜெயபவன் புண்ணாலைக்கட்டுவன் 25000. 00 ரூபா பெறுமதியான பொருட்கள் 1மூடை அரிசி | | |
| செல்லமுத்தூஸ் புடவையகம் | நெல்லியடி | 10000. 00 |
| த. பரமேஸ்வரி | சங்கத்தானை | மரக்கறி 15k அரிசி |
| நா. குணசிங்கம் | கோண்டாவில் | 10000. 00 |
| தே. திலீப் | பருத்தித்துறை | 1000. 00 |
| கோ. இளமுருகேசலிங்கம் | மீசாலை | 5000. 00 |
| ராகுலன் மேனகா | மீசாலை | 10000. 00 |
| திரு குணலிங்கம் குடும்பம் | குப்பிளான் | 1000. 00 |
| த. சுதர்சன் | புத்தூர் | 500. 00 |
| ப. திவாகர் | புத்தூர் | 500. 00 |
| யோ. கௌரி | நல்லூர் | 1000. 00 |
| வே. பாலராஜா | நல்லூர் | 5000. 00 |
| K. சதானந்தன் | கொழும்புத்துறை | 5000. 00 |
| த. சின்னராசா குடும்பம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| S. விஷாந் | இடைக்காடு | 1மூடை அரிசி |
| க.ச. கணபதிப்பிள்ளை | கைதடி | 2000. 00 |
| தெ. புருஷோத்தமன் | இணுவில் | 1500. 00 |
| திரு உத்தரகுணசீலன் குடும்பம் | லண்டன் | 5000. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சோபியா சத்தியநாதன் | லண்டன் | 5000. 00 |
| கு. நாகேஸ்வரி | வட்டுக்கோட்டை 3புட்டி அரிசி | 1000. 00 |
| சி. சொக்கலோகநாதன் | மல்லாகம் | 500. 00 |
| க. பரமேஸ்வரி | பத்தமேனி | 2000. 00 |
| பெ. நடராஜா | ஜேர்மனி | 5000. 00 |
| க. அப்பாத்துரை | மல்லாகம் | 20000. 00 |
| சி. ஸ்ரீதரன் | மல்லாகம் | 2000. 00 |
| ஜெ. கஜேந்திரன் | அளவெட்டி | 1000. 00 |
| த. திருஞானசோதி நினைவாக | கரவெட்டி | 3000. 00 |
| ஜனகன் லினூசன் | ஜேர்மனி | 40 யூரோ |
| செ. செந்தூரன் | அவுஸ்திரேலியா | 20000. 00 |
| ச. தாஸ்குமார் | கொழும்பு-6 | 5000. 00 |
| திரு ஞானரத்தினம் குடும்பம் | கனடா | 10000. 00 |
| K. டர்மிகன் | பன்னாலை | 3000. 00 |
| செ. செல்வரட்ணம் | சுழிபுரம் | 4000. 00 |
| திரு குமாரவேல் குடும்பம் | கொழும்பு | 1000. 00 |
| ம. சஞ்சித் | வவுனியா | 500. 00 |
| திரு செந்தில்நாதன் குடும்பம் | கைதடி | 2000. 00 |
| T. பத்மநாதன் | பருத்தித்துறை | 5000. 00 |
| திரு செல்லத்துரை குடும்பம் | பருத்தித்துறை | 1மூடை அரிசி |
| ஸ்ரீ துர்க்கானந்தன் | சுன்னாகம் | 5000. 00 |
| M. திலக்ஷன் | நோர்வே | 5000. 00 |
| S. தயாபரன் | தம்பசிட்டி | 1000. 00 |
| P. சிவபாதம் | யாழ்ப்பாணம் | 6000. 00 |
| B. பிரியந்தினி | சுண்டுக்குளி | 7000. 00 |
| திரு சிவபாதம் குடும்பம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| மு. வினோத் | மானிப்பாய் | 1000. 00 |
| S. சாய்பிரகாஸ் | சண்டிலிப்பாய் | 1000. 00 |
| S. டிலக்ஸ் | கைதடி | 5000. 00 |
| கபில் ரமணன் | இணுவில் | 1000. 00 |
| செ. செல்வக்குமார் | வவுனியா | 1000. 00 |
| திரு செல்வநாயகம் | வவுனியா | 1000. 00 |
| ராசநாயகம் ரதி | சுன்னாகம் | 2மூடை அரிசி |
| ராசம்மா நினைவாக | சுன்னாகம் | 2000. 00 |
| S. கிருத்திகா | சித்தங்கேணி 1புட்டி அரிசி | 5000. 00 |
| T. சாந்தினி | அரியாலை | 2000. 00 |
| அ. ஜெயக்குமார் | கதிரிப்பாய் | 1000. 00 |
| ச. தாட்சாயினி | லண்டன் | 5000. 00 |

*எதிர்ப்பு இல்லாத இடத்தில் வெற்றி இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வி. நளாயினி | கொழும்பு | 1000. 00 |
| K. தர்மலிங்கம் | மூத்தவிநாயகர் கோயிலடி | 5000. 00 |
| சி. கந்தையா | பலாலி | 5000. 00 |
| வ. சாய்கா | மல்லாகம் | 2000. 00 |
| க. தவேந்திரன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| திரு பேராயிரவன் குடும்பம் | அராலி | 2000. 00 |
| ஆ. கணபதிப்பிள்ளை | சிறுப்பிட்டி | 1000. 00 |
| இ. செந்தூரன் | சிறுப்பிட்டி | 1000. 00 |
| திரு கனகலிங்கம் குடும்பம் | சுன்னாகம் | 2000. 00 |
| N. கயூரன் | புத்தூர் | 5000. 00 |
| மா. பாஸ்கரன் | ஜேர்மனி | 2000. 00 |
| K. வசந்தன் | உசன் | 10000. 00 |
| வ. நர்த்தனா | அச்சுவேலி | 5000. 00 |
| ஆ. நவரத்தினம் | எழுதுமட்டுவாள் | 2000. 00 |
| சி. உருத்திரலிங்கம் | கோப்பாய் | 8000. 00 |
| திரு சிவசண்முகமூர்த்தி குடும்பம் | சுழிபுரம் | 5000. 00 |
| வே. சிவானந்தன் | அராலி | 500. 00 |
| ஆ. நடராசா | உடுவில் | 1000. 00 |
| T. ரம்மிஜன் | கொழும்பு | 1000. 00 |
| K.R. ஜெயராணி | திருகோணமலை | 5000. 00 |
| பா. தங்கராசா | நீர்வேலி | 10000. 00 |
| ச. முருகதாஸ் | புன்னாலைக்கட்டுவன் | 1000. 00 |
| க. தமிழ்வேந்தன் | புன்னாலைக்கட்டுவன் | 1000. 00 |
| சாந்தி புடவையகம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| இ. யோகம்மா | இமையாணன் | 2000. 00 |
| ந. தனஞ்சன் | இமையாணன் | 2000. 00 |
| சு. சேந்தன் | இடைக்காடு | 1000. 00 |
| சு. சேயோன் | இடைக்காடு | 1000. 00 |
| த. சுதாகர் | இடைக்காடு | 1000. 00 |
| இ. ராசேந்திரம் | சண்டிலிப்பாய் | 5000. 00 |
| R. குகவரதன் | இணுவில் | 1மூடை அரிசி |
| R. சற்குணநாதன் | இணுவில் | 1000. 00 |
| பி. பிரதோஸ் | அமெரிக்கா | 1000. 00 |
| வி. செந்தூரன் குடும்பம் | கொழும்பு | 1000. 00 |
| சு. குமரகுருநாதன் | கந்தர்மடம் | 6000. 00 |
| ஆ. விநாயகமூர்த்தி | கரணவாய் | 1000. 00 |
| செல்வி அ. கந்தையா | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திருமதி ஞானசூரியர் | யாழ்ப்பாணம் | 1000. 00 |

*மற்றவர்களைவிட அறிவாளியாக இருக்க கூடுதல் முயற்சி செய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வி. லோகினி | கரவெட்டி | 2000. 00 |
| பா. செல்வகுமார் | பிரான்ஸ் | 20000. 00 |
| S. தனராஜா | கோண்டாவில் | 5000. 00 |
| செ. ஈஸ்வரமூர்த்தி | புங்குடுதீவு | 500. 00 |
| ஈ. சுசிலாதேவி | கனடா | 1000. 00 |
| க. சஜித்தா | லண்டன் | 20000. 00 |
| வி. விஜயகோபி, வி. அனுஷியா | உரும்பராய் | 10000. 00 |
| தர்மு நினைவாக | தொண்டைமானாறு 1மூடை அரிசி | 5000. 00 |
| கு. பானுஜன் | நல்லூர் | 2000. 00 |
| லைலா பார்த்தீபன் | அவுஸ்திரேலியா | 6000. 00 |
| அன்னபாக்கியம் மூலம் ச. பிரவீனன் | அச்சுவேலி | 5000. 00 |
| மனோராணி மூலம் மகாதேவன் நினைவாக | சுன்னாகம் | 5000. 00 |
| T. திருக்குமரன் | திருநெல்வேலி | 3000. 00 |
| ம. தவச்செல்வி | சங்கானை | 1000. 00 |
| சோ. அருள்ராசா | சங்கானை | 1000. 00 |
| நே. தமிழ்ச்செல்வி | சங்கானை | 1000. 00 |
| ப. விஜயராஜா | சங்கானை | 1000. 00 |
| நவரூபராஜா கோமதி குடும்பம் | வல்வெட்டி | 48000. 00 |
| S. நீவிதன் | கொக்குவில் | 500. 00 |
| S. ஜெயராமசர்மா | சுதுமலை | 500. 00 |
| V. நந்தகுமார் | மானிப்பாய் | 5000. 00 |
| லயன் B.R. ரஞ்சன் | யாழ்ப்பாணம் 2மூடை அரிசி | 1000. 00 |
| தி. பாலசுப்பிரமணியம் | கரணவாய் | 3000. 00 |
| வீ. பத்மசீலன் | கனடா (கதிரிப்பாய்) | 10000. 00 |
| சி. அசிதன் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| சு. பெனுசிகன் | மானிப்பாய் 1புட்டி அரிசி | 500. 00 |
| J. சோபனா | உரும்பராய் | 1000. 00 |
| திரு யோகேஸ்வரன் குடும்பம் | மானிப்பாய் | 1மூடை அரிசி |
| திருமதி பா. சிவனேஸ்வரி | கோப்பாய் | 5000. 00 |
| ந. இந்திரகுமார் | அச்சுவேலி | 5000. 00 |
| திரு கணேசமூர்த்தி குடும்பம் | காரைநகர் | 500. 00 |
| திரு பிரகலாதன் குடும்பம் | லண்டன் | 5000. 00 |
| R. பஞ்சலிங்கம் | ஊரிக்காடு | 2000. 00 |
| செ. விக்னேஸ்வரன் | சண்டிலிப்பாய் | 2புட்டி அரிசி |
| சு. தவபாலன் | ஆவரங்கால் | 10000. 00 |
| S. ஸ்ரீதரன் குடும்பம் | சாவகச்சேரி | 1000. 00 |
| நாகமணி செல்லம்மா குடும்பம் | தம்பாலை | 5000. 00 |

(தொடரும்...

*நம்பிக்கையற்றவன் எந்த உலகிலும் இன்பம் காணமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்மமும் விளைவும்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

ஒருவருக்கு நோய் வந்துவிட்டால் வீட்டில் உள்ளோர் சுற்றத்தார் அயலவர் நண்பர்கள் ஆகியோர் அதற்கு ஒவ்வொரு காரணம் கூறுவார்கள்.

வாயு சம்பந்தமான உணவை உட்கொண்டதால் அந்நோய் வந்தது அல்லது ஆயுள்வேத வைத்தியர் அஜீரணம் என்பார். அதீத குழப்பம்தான் காரணம் என்பார் மனோதத்துவ நிபுணர். தெய்வக் கோளாறு என்பார் மந்திர சாஸ்திரக்காரர். கிரக மாற்றப் பலன் என்பார் சோதிடர். தர்ம சாஸ்திரம் அறிந்தோர் பூர்வ கர்ம பலன்தான் காரணம் என்பர்.

இது ஒரு புறமிருக்க, நோய்க்கு மட்டுமன்றி எமது வாழ்வின் சுக துக்கங்களுக்கும் எமது கர்ம வினைகளே காரணம் எனக் கூறப்படுகின்றது. இந்நிலையில் நாம் எவ்வாறு செயற்படுவது?

கிரகக் கோளாறு எனக் கொண்டு ஜோதிடர் சொற்படி கிரகங்களுக்குப் ப்ரீதி செய்வதா, மாந்தீரிகர் சொற்படி செய்த பாவத்துக்குச் சாந்தி பரிகாரம் செய்வதா, எது செய்யாவிட்டாலும் நோய் எனக் கண்டு முதலில் வைத்தியம் செய்தே ஆகவேண்டும். கர்ம பலன் என்பதற்கு அது தீரும் வரை இருந்து விட்டும் போகட்டும் என நாம் இருந்துவிட முடியுமா? ஒரே குழப்பம் தான். வாழ்க்கையை வாழ்ந்துதானே ஆக வேண்டும். நல்லதோ கெட்டதோ, இன்பமோ, துன்பமோ, சகித்துத்தான் ஆக வேண்டும். இந்தக் கஷ்டங்களை எல்லாம் இனியும் தாங்கமுடியாது என அவசர புத்தியில் வந்து தற்கொலை செய்து கொள்வோரும் உண்டு. இது பாவங்களில் மிகக் கொடிய பாவமாகும். ஆண்டவன் தந்த உடலை அழிக்கவோ உயிரைப் போக்கிக் கொள்ளவோ எமக்கு அருகதை இல்லை. உரிமையும் இல்லை. இம் முடிவு மிகத் தப்பான முடிவு.

எமது வாழ்க்கையில் இடம்பெறும் இன்ப துன்பங்களுக்கு எது காரணம் என அந்த வகையில் சிந்தித்தாலும் ஆதி காரணம், எமது முன் வினைப்பயன்தான். அதாவது எமது கர்மம் என்பதுதான் நிட்சயம். விஞ்ஞானம் கூறுவதும் அதுவேதான். விளைவு இருந்தால் காரணம் இருந்தே ஆக வேண்டும்.

உலகம் முழுவதும், காரணம், விளைவு என்ற இரண்டிற்குள்ளும் கட்டுண்டுள்ளது. ஜட பிரபஞ்சமும் ஜீவ பிரபஞ்சமும் மூலத்திலிருந்தே தோன்றிய காரணத்தால் உலகுக்கு உள்ள நியதி, விதி, என்பன மனிதனுக்கும் உண்டு.

இந்த வகையில் எமது செயலுக்கு பிரதி விளைவு உண்டு. நற்பயனோ, தீயதோ அது எமது செயலைப் பொறுத்தது. இன்று நாம் அனுபவிக்கின்ற சுக துக்கங்களுக்கு காரணம் நாம் முன் ஜென்மத்தில் செய்த செயல்கள் என்பது உண்மை.

எமது பாவமூட்டையை கழுவவே யாம் பூமியில் ஜனனம் செய்கின்றோம். இதனைப் புரிந்துகொள்ளாது மீண்டும் யாம் எமது தவறான செயல்களால் எம்மீது அழுக்கேற்றலாமா?

*முடியாது என்பது முட்டாளின் தத்துவம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதற்கும் முதலில் எமது சிந்தனை நல்லதாக உயர்ந்ததாக அமைய வேண்டும். உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் என்றவாறு எமது சிந்தனைகள் நற்சிந்தனைகளாக அமையும்போது, அவையே, எம்மை, பரோபகாரம், சேவை மனப்பான்மை, தியாகம் அன்பு ஆகியவற்றோடு கூடிய நற்செயல்களைச் செய்ய வைக்கின்றது.

சமயம் என்பது தனிப்பட்ட ஒன்றல்ல. இவை எல்லாம் சேர்ந்த கூட்டுத்தான் சமயம், எம்மை நல்வழியில் நெறிப்படுத்துவது சமயம்.

தோத்திர பாராயணம், பூசை, ஆலய தரிசனம் என ஆரம்பித்தாகும் பக்தி, எம்மை மேலும் மேலும் இறையிடம் ஒன்றுபடுத்த, இறையின்பத்தை நாம் சிறிதாக அனுபவிக்க, இத்தகைய நல்ல அனுபவங்களைப் பெற வழிவகுக்கின்றது. நாம் தினமும் பக்தி செய்ய வேண்டும். இதனால் எமது கவலைகள், பிரமைகள், மயக்கங்கள், எல்லாம் எம்மை விட்டகலும். ஆயிரம் கோடி வழிகளில் அலைபாயும் எமது மனதை அடக்க இறை வழிபாடே சிறந்த மார்க்க மாகும். எமது பாவங்களைப் பெருக்காமல் அவற்றை சிறிது சிறிதாக கரைத்துக்கொள்ளவும், மன நிம்மதி பெறவும் இறைவழிபாடே சிறந்த மார்க்கமாகும்.

எனவே எமது அன்றாட நிகழ்வுகளில் இறை வணக்கத்தைத் தவறாது ஆற்றி இறை இன்னருள் பெறுவோமா?

---

**இந்த உலகில் வாழும் மக்கள் உயர்ந்தவரா, தாழ்ந்தவரா, பாவியா, புண்ணியவானா, நல்லவரா, கெட்டவரா என்று எந்த மதிப்பெண்ணையும் வழங்குவதற்கு நமக்கு உரிமை கிடையாது. உலகில் நம்மோடு பயணிக்கும் சக பயணி அவர். யாரும் எந்த மதத்தின் சார்பிலோ, பிரிவின் சார்பிலோ பிறக்கவில்லை. பூமியில் ஒரு மனிதராகப் பிறக்கிறோம். அவ்வளவுதான். இனிமேல் யாராவது உங்களைத் தாழ்த்திப் பேசினால் "என் வாழ்வில் நான்.... உங்களைப் பார்த்ததுதான் தாழ்வான விடயமே அல்லாமல் வேறெந்த வகையிலும் நான் தாழ்ந்தவனல்ல" என்று கூறிவிடுங்கள்.**

**அன்பர்களே சொற்கள் மனதை ஊடுருவும் தன்மை வாய்ந்தவை. யாரிடம் பேசுவதாக இருந்தாலும் அவர்கள் மனம் புண்படாதபடி பேசுங்கள். உங்கள் பிள்ளைகளை அழைத்துப் பேசும்போதுகூட "கண்ணா இங்கே வாடா" என்று சொல்லி அழைத்து அன்புடன் பேசுங்கள். அதிகாரமாகப் பேசாதீர்கள். காலையிலே அவர்களைத் தூக்கத்திலிருந்து விழிக்கச் செய்யும்போதும் அன்பான வார்த்தைகளைப் பிரயோகியுங்கள். "கழுதை வயதாகிவிட்டது என்னும் தூங்குகிறாயா? மற்றப் பிள்ளைகளும் இப்படியா? பொறுப்பில்லாத...? என்றெல்லாம் கடிந்துகொள்ளாதீர்கள்.**

**காலையிலே சுப்பிரபாதத்தில் ஸ்ரீ ராமனை வசிஷ்டர், "கௌசல்யா சுப்ரஜா ராம பூர்வா, சந்யா ப்ரவர்த்தே" என்று அன்பாக எழுப்புகிறார். அதாவது "கௌசல்யாவின் நல்ல மகனான ராமனே, சூரியன் வானில் உதித்துவிட்டான் எழுந்திரு" என்று அன்போடு எழுப்புகிறார்.**

**முட்டாளின் இதயம் அவன் வாயிலிருக்கிறது. ஆனால் அறிவாளியின் வாய் அவன் இருதயத்தில் இருக்கிறது.**

*நிதானமாக ஆலோசி. ஆனால் துணிவுடன் செயற்படு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதின் இடைவிடா தீர்மானங்கள்

**– ஓஷோவின் விழிப்புணர்வுக் கதை –**

நான் மிகவும் நேசிக்கும் ஜென் கதை ஒன்று உள்ளது. நண்பர்கள் மூவர் காலை நேரத்தில் உலாவச் சென்றிருந்தனர். அப்போது அவர்கள் திடீரென மலையில் ஜென் துறவி ஒருவர் நின்றிருப்பதைக் கண்டனர்.

அந்த மூன்று நண்பர்களில் ஒருவன், "அவர் அவருடைய நண்பர்களுடன் வந்திருக்க வேண்டும். இவர் அவர்களைவிட முன்னால் வந்திருக்க வேண்டும். அதனால் இவர் அவர்களுக்காகக் காத்திருக்கிறார் என்று நான் நினைக்கிறேன்" என்று கூறினான்.

இன்னொருவன், "நீ கூறுவதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. ஏனெனில் அந்த மனிதரை பார்க்கும்போது ஒரு விஷயத்தை என்னால் நிச்சயமாக கூற முடியும். அவர் யாரோ ஒருவருக்காகக் காத்திருக்கவில்லை என்பதே அது. ஏனெனில் அவர் ஒருபோதும் பின்னால் திரும்பிப் பார்க்கவில்லை. அவர் வெறுமனே ஒரு சிலையைப்போல் நின்றுகொண்டிருக்கிறார். தனியாக விடப்பட்டு மற்றவர்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கும் யாராக இருந்தாலும் சிறிது நேரத்திற்கு ஒருமுறை அந்த நபர் வந்துவிட்டாரா இல்லையா என்று பார்ப்பார்கள். ஆனால் இவர் நகரவே இல்லை. அவர் எந்த நண்பனுக்காகவும் காத்துக்கொண்டிருக்கவில்லை. இந்த துறவியை நான் அறிவேன். அவரிடம் ஒரு பசுமாடு இருக்கவேண்டும், அந்தப் பசு இந்த அடர்த்தியான காட்டிற்குள் தொலைந்து போயிருக்கவேண்டும். இதுதான் இருப்பதிலேயே மிகவும் உயரமான இடம், எனவே அங்கிருந்து அவரால் இந்த காடு முழுவதையும் பார்த்து அந்தப் பசு எங்கிருக்கிறது என்று கண்டறிய முடியும் என்று அவர் அங்கிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்" என்றான்.

மூன்றாவது நபர், "உன்னுடைய சொந்த வாதத்தை நீயே மறுத்துவிட்டாய். அவர் பசுவைத் தேடிக்கொண்டிருந்தால் அவர் சுற்றிலும் பார்த்துக்கொண்டிருப்பார். அவர் ஒரு திசையைப் பார்த்தபடி வெறுமனே ஒரு சிலையைப்போல அங்கு நின்றுகொண்டிருக்க மாட்டார். தொலைந்துபோன பசுவைத் தேடும் வழி இதுவல்ல" என்று கூறினான். "எனக்குத் தெரிந்த வகையில் அவர் அவருடைய காலைநேர தியானத்தைச் செய்து கொண்டிருக்கிறார்" எனக் கூறினான்.

ஆனால் மற்ற இருவரும், "ஜென்னின் அடிப்படை தத்துவமே நீ எங்கு வேண்டுமானாலும் தியானம் செய்யலாம், எதைச் செய்துகொண்டிருந்த போதிலும் தியானம் செய்யலாம் என்பதுதானே. எனவே அந்த மலைக்கு அதிகாலையில் குளிரில் சென்று நின்றுகொண்டு தியானம் செய்யவேண்டிய அவசியம் என்ன?" என்று கேட்டார்கள். "அவர் அவருடைய கத கதப்பான மடாலயத்தில் அவர்களுடைய தனிச்சிறப்பு வாய்ந்த தியான ஆலயத்தில் தியானம் செய்திருக்க முடியும். அவர் அங்கு இருந்திருக்கலாம் - மலைக்கு செல்லவேண்டிய தேவை என்ன? இல்லை இதை நாங்கள் ஒத்துக்கொள்ள முடியாது" என்று கூறினார்கள். அவர்கள் விவாதித்தனர். முடிவில் அவர்கள் நாம் மலைக்குச் செல்வதுதான் சிறந்ததாக இருக்கும்.

*ஒருவன் சிரிக்கும்போதெல்லாம் மரணம் தள்ளிப்போடப்படுகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது நேரத்தை வீணடிப்பதாக இருக்கலாம், ஆனால் அவர் என்ன செய்கிறார் என்று முடிவு செய்ய இதைத்தவிர வேறு எந்த வழியும் இல்லை என்று கூறினார்கள்.

மனதின் ஆர்வம் அத்தகையது - மிகவும் குரங்குத்தனமானது. எதற்காக நீ இப்போது உன்னை சிரமப்படுத்திக்கொள்கிறாய்? அவர் செய்வது என்னவாக இருந்தாலும் செய்துவிட்டு போகட்டும். அவர் ஒருவேளை அவருடைய பசுவைத் தேடிக்கொண்டிருந்தால் அது அவருடைய பிரச்சினை. ஒருவேளை அவர் அவருடைய நண்பருக்காகக் காத்துக்கொண்டிருந்தால் அது அவருடைய விருப்பம். ஒருவேளை அவர் தியானித்துக் கொண்டிருந்தால் அது அவருடைய சொந்த விஷயம் - நீ எதற்காக உன்னுடைய மூக்கை அதற்குள் நுழைக்கிறாய். ஆனால் மக்கள் அப்படித்தான் இருக்கிறார்கள்.

ஒருவருக்கொருவர் விவாதம் செய்ததில் மிகவும் உற்சாகமடைந்து அவர்கள் நாம் மேலே சென்றாக வேண்டும் என்று முடிவு செய்தனர். அவர்கள் வெறும் சிறிய காலைநேர உலாவலுக்குத்தான் வந்தனர் என்பதை மறந்து விட்டனர். மேலும் மலைக்கு செல்வதற்கு பல மணி நேரம் ஆகும் என்பது மட்டுமல்ல மலையிலிருந்து கீழே இறங்கி வரும்போது சூரியன் கிட்டத்தட்ட உச்சியில் இருப்பான் என்றாலும் கூட கேள்வி.... அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும். அது மட்டுமல்ல, உண்மையில் அவர்கள் தாங்கள் கூறியது தான் சரி என்று நிரூபிக்க விரும்பினார்கள்.

ஒவ்வொருவரும் நான்தான் கூறியது சரி என்பதை நிரூபிக்க விரும்பினார்கள். இப்போது அதனை முடிவு செய்யக்கூடிய ஒரே மனிதன் அந்த துறவிதான்.

அவர்கள் மூச்சுவாங்கிக்கொண்டு அங்கு அடைந்தனர். துறவி அரைக் கண்ணை மூடிக்கொண்டு அங்கு நின்றிருந்தார். அது புத்தமத வழி - நீ தியானம் செய்யும்பொழுது, கண்களை பாதி மூடிக்கொள்வது - ஏனெனில் ஒருவேளை நீ கண்களை முழுவதுமாக மூடி விட்டால் நீ தூக்கத்தில் விழுந்துவிடக்கூடும். அப்போது தியானத்தில் செல்வதை விட தூக்கத்தில் விழ அதிக சாத்தியக்கூறு உள்ளது. நீ ஒருவேளை உன்னுடைய கண்களை முழுவதுமாகத் திறந்திருந்தால் நீ ஆயிரத்தொரு விஷயங்களில் ஆர்வம் கொள்வாய். ஒரு அழகான பெண் கடந்து செல்கிறாள், அப்போது தியானம் தொலைந்து விடுகிறது. எது வேண்டுமானாலும் தொல்லை கொடுக்கலாம். எனவே கண்களை பாதி மூடிக்கொண்டிருந்தால் நீ வெளியில் என்ன நடக்கிறது என்று சரியாகப் பார்க்கமாட்டாய், நீ பாதி கண்களை திறந்து வைத்திருக்க வேண்டும் எனவே நீ தூக்கத்தில் விழுந்துவிடமாட்டாய்.

முதல் மனிதன் கேட்டான், “குருவே, நாங்கள் உங்களைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம், ஆனால் நாங்கள் உங்கள் மடாலயத்திற்கு வரும் வாய்ப்பைப் பெற்றதில்லை. காலைநேர நடைக்காக வந்த நாங்கள் அதிர்ஷ்டவசமாக உங்களைக் கண்டோம். எங்களுக்கு ஒரு கேள்வி உள்ளது. அதற்கு நீங்கள் விடையளிக்கவேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். நீங்கள் நண்பருக்காகக் காத்திருக்கிறீர்களா?” அரைக்கண் மூடிய நிலையில் அந்த துறவி, “எனக்கு யாரும் இல்லை. நான் தனியாக உள்ளேன். நான் தனியாகப் பிறந்தேன், நான் தனியாகத்தான் இறப்பேன், மற்றும் இந்த இரு தனிமைகளுக்கிடையில் என்னுடன் யாரோ இருக்கிறார்கள் என்று என்னை நானே முட்டாளாக்கிக்கொள்ள முயற்சி செய்யவில்லை. நான் தனியாக உள்ளேன், மேலும் நான் யாருக்காகவும் காத்திருக்கவில்லை” என்று கூறினார்.

*உழைப்பிற்குத் தகுந்த பலன் ஒருநாள் கட்டாயம் கிடைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது மனிதன் மகிழ்ச்சியோடு, "அப்படியானால் நிச்சயமாக உங்களுடைய பசு இந்த அடர்த்தியான காட்டில் தொலைந்திருக்க வேண்டும். நீங்கள் கண்டிப்பாக அதனைத்தானே தேடிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

துறவி, "வித்தியாசமான அடிமுட்டாள்கள்தான் இங்கு வருவார்கள் போலத் தெரிகிறது. என்னிடம் ஒரு பொருளும் இல்லை. என்னிடம் எந்தப் பசுவும் இல்லை. மடாலயத்தில்தான் அது உள்ளது. அது என்னுடைய வேலை அல்ல. அதனால் நான் எதற்காகப் பசுவைத் தேடி என்னுடைய நேரத்தை வீணடிக்க வேண்டும்?" என்று கூறினார்.

மூன்றாவது மனிதன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். அவன் "இப்போது நீங்கள் மறுக்கமுடியாது. நீங்கள் கண்டிப்பாக தியானம் செய்துகொண்டிருக்க வேண்டும். அப்படித்தானே. நீங்கள் உங்களுடைய காலை நேரத் தியானத்தைச் செய்து கொண்டிருக்கிறீர்கள்தானே?" என்று கூறினான்.

துறவி சிரித்தார். அவர் "நீதான் மூவரில் மோசமான முட்டாள். தியானம் செய்யப்படுவதல்ல, அது ஒரு செயலல்ல. நீ தியானத்தில் இருக்கலாம். ஆனால் அதை நீ செய்யமுடியாது. அது ஒரு நிலை. எனவே நிச்சயமாக நான் தியானம் செய்துகொண்டிருக்கவில்லை. நான் தியானத்தில் இருக்கிறேன், ஆனால் அதற்காக இந்த மலைக்கு வரவேண்டியதில்லை, எங்கு இருந்தாலும் நான் தியானத்தில் இருக்கிறேன். தியானம் எனது தன்னுணர்வு. எனவே நீங்கள் அனைவரும் சென்றுவிடுங்கள். மேலும் அரைக் கண்ணை மூடியபடி இருக்கும் யாரையும் ஒருபோதும் தயவுசெய்து தொந்தரவு செய்யாதீர்கள். அதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்" என்று கூறினார்.

அப்போது அவர்கள் மூவரும் மன்னித்துவிடுங்கள்.... நாங்கள் முட்டாள்தனமாக நடந்துகொண்டுவிட்டோம், நிச்சயமாக மைல் கணக்கில் கடந்து வந்து உங்களிடம் இப்படிப்பட்ட.... எங்களுக்கு அவமானமாக உள்ளது. நாங்கள் முட்டாள்கள்தான், ஆனால் இப்போது எங்கள் மூவரிடம் இருந்தும் தனித்தனியாக இல்லாமல் ஒரே கேள்விதான். பிறகு நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டனர்.

அப்போது அந்தத் துறவி ஏதும் சொல்லவில்லை. அந்த ஏதும் அற்ற தன்மையே சாட்சிபாவம். நீ சாட்சிபாவமாக இருக்கும்பொழுது, நீ ஆச்சரியமடைவாய். அதாவது சலிப்பு, சோகம், ஆனந்தம், பரவசம் - எதுவாக இருந்தாலும் அது உன்னைவிட்டு விலகிச் செல்லத் தொடங்குகிறது. உன்னுடைய சாட்சிபாவத்தன்மை ஆழமாக மாற மாற, சக்தி மிக்கதாக ஆகும் போது, அதிக ஒருமை தன்மை கொண்டதாக மாற மாற எந்த அனுபவமாக இருந்தாலும் - நல்லது அல்லது கெட்டது அழகானது அல்லது அசிங்கமானது - அது மறைந்துவிடுகிறது. அங்கு தூய்மையான ஏதும் அற்ற தன்மை உன்னைச் சுற்றி நிலவுகிறது. சாட்சிபாவம் ஒன்று மட்டுமே உன்னைச் சுற்றியுள்ள அளவிடமுடியாத ஏதும் அற்ற தன்மையை குறித்த உணர்வை உனக்கு ஏற்படுத்தும். மேலும் அந்த அளவிடமுடியாத ஏதும் அற்ற தன்மையில்... அது காலியானது அல்ல, நினைவில் கொள். புத்தமத வார்த்தையான சூன்யதா என்பதை மொழி பெயர்க்க ஆங்கிலத்தில் வேறு எந்த வார்த்தையும் இல்லை. அந்த ஏதும் அற்ற தன்மையில்... அது காலியானது அல்ல, அது உன்னுடைய சாட்சிபாவத்தால் நிரம்பியுள்ளது. உன்னுடைய சாட்சிபாவத்தன்மையால் நிறைந்துள்ளது. உன்னுடைய சாட்சிபாவத்தின் ஒளியால் நிறைந்துள்ளது.

*காலத்தின் மதிப்பு தெரிந்தால்தான் வாழ்க்கையின் மதிப்பு தெரியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளியாய் விளங்கிடுவான்!

அருள் தரும் அந்த
ஆறுமுகன் இருக்க,
அஞ்சுதல் உனக்கேனோ?
சொல் மனமே!
ஆறுபடை வீடமர்ந்தோன்
அருகில் இருக்கையிலே
ஆறுதலைத் தந்திடுவான்
ஆராதிப்பாய் தினமே!

பக்தி கொண்டே அவனைப்
பரவிப் பணிபவர்க்குப்
பாரினில் குறைகள் என்று
ஏதும் இல்லையே!
சக்தி எல்லாம் தந்து,
சஞ்சலங்கள் தீர்த்திடும்,
சரவணன் துணையிருந்தால்
சகலர்க்கும் நிம்மதியே!

கருணை வடிவான
கந்தன் இருக்கையிலே,
காரியங்கள் யாவையுமே
கைகூடி வந்திடுமே!
அருள் தந்து காத்திடும்
ஆறுமுகன் திருவருளால்
அணுகும் வினை யாவும்
பறந்தே ஓடிடுமே!

செல்வச் சந்நிதியில்
வேலவன் வேலிருக்கச்
செல்வ மெல்லாம், இங்கு
வந்தே சேர்ந்திடுமே!
வல்லவனே என்றும்
எமைக் காப்பான்!
வாழ்வுக்கு ஒளியாக
அவனே விளங்கிடுவான்!

*-கி. குலசேகரன்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல: DOP/NEWS/103/2023

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org